[illegible]

3 9

2-5-1931

7L

N31·3·9

# நான் யார் தெரியுமா?

நான் யார் என்றால், உங்களுடைய கிழத்தன்மையை ஒழித்து, தேகபுஷ்டியை கொடுக்கப்பட்டவன். போலி மருந்துகளைவாங்கி மோசம்போகாதீர்கள்.

என் பெயர்

## மதனமஞ்சரிமாத்திரை.

என்றுசொல்வார்கள். நான் அஜீரணத்தையும், மலச்சிக்கலையும் தேக அசதியையும் ஞாபகக்குறைவையும், இந்திரியஸ்கலிதமும், வேருடன் நாசமாக்கி தேக புஷ்டியையும், ஆரோக்கியத்தையும் கொடுக்கப்பட்டவன். நீங்கள் ஒருதரம்வாங்கிஉபயோகித்தால் இதன் உண்மையைதெரிந்துகொள்ளலாம்.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு விலை ரூ 1-0-0

**இனம்! கேட்லாக் இனம்!!**

மதனமஞ்சரி பார்மஸி,

1/94 சைனாபஜார் ரோட், மதராஸ்.

---

தந்தி விலாசம்:—கிரேயான்ஸ். 1922ல் ஸ்தாபிதம்.

சென்னைக் கவர்னர் பாராட்டிய தொழிற்சாலை எது?

## நேஷனல் கிரேயான் ஒர்க்ஸ்,

கும்பகோணம்.

இதில் பாடசாலைகளுக்குவேண்டிய பலவர்ண சாக்கட்டிகள், பிலியார்டு சாக்பீஸ்கள், சாக்கட்டியில் பிளாட்டிங் பேப்பர் வெயிட்டுகள், பென்ராக்குகள், இந்து ஆலய விக்ரகங்கள் முதலியவை வெகு அபூர்வமாகத்தயாரிக்கப்படுகின்றன. மெடல்களும் ஸர்ட்டிபிகேட்டுகளும்பெற்றது, கவர்மெண்டாரால் ஆதரிக்கப்பெற்றது எங்கள்தொழிற்சாலையில் நவராத்திரியைஉத்தேசித்து ஸ்பெஷலாக ஸ்ரீகணேசர், ஸ்ரீஆஞ்சநேயஸ்வாமி, ஸ்ரீலக்ஷ்மி, ஸ்ரீஸரஸ்வதி முதலிய பிம்பங்கள் அழகாய் தயாரிலிருக்கின்றன. விபரம் மானேஜருக்கு ஒருஅணா தபால் பில்லை அனுப்பி தெரிந்து கொள்ளவும். விபரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

வருட சந்தா ரூ. 3 Rgd. No. M. 2419



மாத்வமித்திரன்



# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar,

KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்



| Vol 3 | பிரஜோத்பத்தி ஸம்வத்ஸரம் | No. 9 |
|---|---|---|
| | வைசாக மாஸம் | |
| புஸ்தகம் 3 | பௌர்ணமி (2—5—31) | நெ. 9 |



பொருளடக்கம்


நெ. பக்கம்.

1. ஸ்ரீமத்வமதத்தின் இரகசியங்கள் 257
2. புருஷ ஸூக்தம் 259
3. ஷட்ப்ரச்ன உபநிஷத் 261
4. ஸ்ரீ தாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) 265
5. துவாதச ஸ்தோத்திரம் (ஸ்ரீமத்வாசாரியார்) 273
6. துவைதாத்வைத விசாரசபை 276
7. செய்தித்திரட்டு 281


ஆசிரியர்

பாகவத ரங்கநாதாசாரியார்.

ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

12 MAY 1931

## ஸ்ரீமத்வமதத்தின் இரகசியங்கள்.

(முன் தொடர்ச்சி.)

அந்த வைகுண்டம் ஸ்ரீபாகம், பூபாகம், துர்க்காபாகமென்று மூன்று பாகமாய் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீபாகமென்பது வைகுண்டலோகத்தின் நடுவில் கிழக்கு மேற்காக நீட்டுப்போக்கில் இருபத்திமூன்றுகோடி யோஜனை தூரமிருக்கிறது. இந்த ஸ்ரீபாகத்திற்கு தென்புரத்தில் பூபாகம் இரண்டரைகோடி யோஜனை விஸ்தீர்ணமானது. இந்த ஸ்ரீபாகத்திற்கு வடபுரத்தில் துர்க்காபாகம் இரண்டரைகோடி யோஜனைதூரம் விஸ்தீர்ணமானது. ஸ்ரீபாகம் பூமிபாகம் இவைகளின் நடுவில் 'அரா' என்ற ஓர் அமிர்தஸமுத்ரமிருக்கிறது. அது இரண்டுகோடி யோசனை விஸ்தீர்ணமுள்ளது. ஸ்ரீபாகம் துர்க்காபாகம் இவைகளின் நடுவில் 'ண்ய' என்ற மற்றொரு அமிர்த ஸமுத்திரமிருக்கிறது. அது ஒரு லக்ஷம் யோஜனை விஸ்தீர்ணமானது. இந்த ஸமுத்திரங்களின் பாதி பாகம் முக்தர்களும் அமுக்தர்களும் அநுபவிக்கத் தகுந்தது. ஸ்ரீபாகத்திற்கு வெளியில் பிரம்மாண்ட கடாஹத்தின் உட்புரம் அதாவது பூபாகத்திற்குமேலே ஏழு ப்ராகாரங்களிருக்கின்றன. முதற் பிராகாரம் நான்குகோடி யோஜனை விஸ்தீர்ணமானது. இரண்டாவது ப்ராகாரம் பன்னிரண்டுகோடி யோஜனைதூரம் விஸ்தீர்ணமானது. இந்த இரண்டாவது ப்ராகாரத்தில்தான் 5 ப்ராகாரங்களிருக்கின்றன. அவைகள் கோடிக் கணக்கான யோஜனை விஸ்தீர்ணமானது. முதல் ப்ராகாரத்தில்

தான் கர்மஜதேவர்கள் முதலானவர்களும், இரண்டாவது ப்ராகாரத்தில் பர்ஜன்யர் முதலானவர்களும், மூன்றாவதில் மருத்கணர்களும், நான்காவதில் சூரியாதிகளும், ஐந்தாவதில் இந்திராதிகளும், ஆறாவதில் ருத்திராதிகளும், ஏழாவதில் பிரம்மாவும் இருக்கின்றனர். இவர்களைத் தவிர்த்துள்ள சிலர் பூபாகம், துர்க்கா பாகம் இவைகளில் சுயேச்சையாய் இருக்கின்றனர். ஒவ்வொரு ப்ராகாரத்திற்கும் நான்கு திக்குகளில் நான்கு கோட்டை வாசல்களுண்டு. ஆக ஏழு ப்ராகாரங்களுக்கு இருபத்தெட்டு வாசல்களுண்டு. இந்த ப்ராகாரங்களெல்லாம் ஸ்வர்ணமயமானவைகள். வாசற்படிகளெல்லாம் புஷ்பராகமாணிக்யத்தால் செய்யப்பட்டிருக்கின்றன. வாசற்கதவுகள் பத்மராகமாணிக்யத்தால் நிர்மிதமானது. கதவுகளுக்கு போடப்பட்டிருக்கும் பட்டங்களெல்லாம் வயிரத்தால் நிர்மிதமானவைகள். அவைகளில் இந்திரநீலமாணிக்யங்கள் குந்தனம் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வாசற்படிக்கும் இரண்டுபுரங்களிலும் இரண்டு சிறு கட்டடங்களுண்டு. ஒவ்வொரு வாசற்படியிலும் ரமாதேவியார் பத்மாஸனத்துடனிருக்கிறார். ஏழு வாசற்படிகளில் அடியிற்கண்ட பதினான்கு த்வாரபாலகர்கள் நிற்கின்றனர். (1) ஜயன், (2) விஜயன், (3) பலன், (4) பிரபலன், (5) சண்டன், (6) பிரசண்டன், (7) நந்தன், (8) ஸூநந்தன், (9) குமுதன், (10) குமுதாக்ஷன், (11) பத்ரன், (12) ஸூபத்ரன், (13) ஸூதாமன், (14) தாமன் இவர்களுக்கு தலைமைவகித்தவர் விஷ்வக்ஸேனர். ஸ்ரீபாகத்தில் கிழண்டை மூன்று த்வாரங்களுண்டு, முதற்வாசற்படியில் ரமாதேவி நிற்கிறாள். இரண்டாவது த்வாரத்தில் சக்ஷுஸ்ஸுக்கு அபிமானியான ப்ராணரெனப்படும் சூர்யன். அப்படியே அவருடைய பார்யாளான பாரதி. மூன்றாவது த்வாரத்தில் ஜயவிஜயர்கள். தென்னண்டை மூன்று வாசற்படிகளுண்டு. அவைகளில் முதல்வாசற்படியில் ரமாதேவி. இரண்டாவதில் ச்ரோத்திரத்திற்கு அபிமானியான வியானரெனப்படுகிறவரும் அவருடைய பாரியாளான திக் எனப்படும் பாரதிதேவியாரும் நிற்கின்றனர். மூன்றாவதில் பலனும் பிரபலனும்தான்

(தொடரும்)



20868
சென்னை 600



# புருஷ ஸூக்தம்.

(முன் தொடர்ச்சி)

**नाभ्या आसीदन्तरिक्षं शीर्ष्णो द्यौः समवर्तत ।**
**पद्भ्यां भूमिर्दिशः श्रोत्रात्तथा लोकानकल्पयन् ॥ १४ ॥**

நாப்பா ஆஸீதந்தரிக்ஷம் சீர்ஷ்ணோர்த்யௌஸ்ஸமவர்த்தத |
பத்ப்பாம் பூமிர்திச: ச்ரோத்ராத்ததாலோகானகல்பயன் ||14||

(நாப்யா:) நாபியினின்றும் (அந்தரிக்ஷம்) புவர்லோகமானது (ஆஸீத்) பிறந்தது. (சீர்ஷ்ண:) சிரஸ்ஸினின்றும் (த்யௌ:) ஸ்வர்க்கலோகமானது (ஸமவர்தத) உண்டாயிற்று. (பத்ப்யாம்) கால்களினின்றும் (பூமி:) பூலோகமானது (ஸமவர்த்தத) உண்டாயிற்று. (ச்ரோத்ராத்) காதினின்றும் (திச:) திக்குகள் (ஸமவர்தந்த) உண்டாயின. (ததா) அப்படியே (லோகான்) வேறு லோகங்களையும் (அகல்பயன்) உண்டாக்கினார்.

**सप्तास्यासन्परिधयः त्रिः सप्त समिधः कृताः ।**
**देवा यद्यज्ञं तन्वाना अबध्नन् पुरुषं पशुम् ॥ १४ ॥**

ஸப்தாஸ்யாஸன்பரிதய: த்ரிஸ்ஸப்தஸமித: க்ருதா: |
தேவாயத்யக்ஞம் தன்வானா: அபத்னன் புருஷம்பசும் ||15||

(தேவா:) தேவர்கள் (யத்) எப்பொழுது (யக்ஞம்) மானஸ யக்ஞத்தை (தன்வானா:) செய்கிறவர்களாய் (பசும்) பசுவாய் (புருஷம்) சதுர்முகனை (அபத்னன்) யூபஸ்தம்பத்தில் சேர்த்துக் கட்டினரோ அப்பொழுது (அஸ்ய) இந்தமானஸ யக்ஞத்திற்கு (ஸப்த) காயத்ரி முதலான ஏழு சந்தஸ்ஸூகள் (பரிதய:) பரிதிகளின் ப்ரதிநிதிகளாக (ஆஸன்) கருதப்பட்டன. (த்ரி:சப்த) இருபத்தொன்று பதார்த்தங்கள் (த்ரி:சப்தசமித:) இருபத்தொன்று ஸமித்துக்களாய் (க்ருதா:) கருதப்பட்டன.

**यज्ञेन यज्ञमयजन्त देवास्तानि धर्माणि प्रथमान्यासन् ।**
**तेहनाकं महिमानः सचन्त यत्र पूर्वे साध्याः सन्ति देवाः ॥**

யக்ஞேனயக்ஞமயஜந்த தேவாஸ்தானி தர்மாணி ப்ரதமாந்யாஸன்|
தேஹநாகம் மஹிமானஸ்ஸசந்த யத்ரபூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா: ||16||

(தேவா:) தேவர்களின் பதவிக்கு அருகர்களான மனுஷ்யர்கள் (யக்ஞேன) ஞானபூர்வமாகிய யக்ஞத்தால் (யக்ஞம்) யக்ஞநாமகரான பகவானை (அயஜந்த) பூஜித்தனர். (தானி) அவர்கள் (ப்ரதமானி) உத்தமர்களான (தர்மாணி) ஜகத்தாரகர்களாய் (ஆஸன்) ஆயினர். (மஹிமான:) மஹாத்மாக்களாகிய (தே) அந்த தேவர்கள் (நாகம்) பூர்ணஸுகமான மோக்ஷத்தை (ஸசந்த) அடைக்கின்றனர். (யத்ர) அந்தமோக்ஷத்தில் (பூர்வே) பூர்வகல்பத்தில் முக்தர்களான (சாத்யா: தேவா:) சாத்யாதிதேவர்கள் (ஸந்தி) இருக்கின்றனர்.

(மூன்றாவது வர்க்கம் முடிந்தது.)

---



12 MAY 1931



# ஷட்ப்ரச்ன உபநிஷத்.

---

## இரண்டாவது ப்ரச்னம்.

எல்லா ப்ரஜைகளையும் சிருஷ்டிப்பது பகவானுடையதென்பது பின்னடி சொல்லப்பட்டது. சிருஷ்டிக்கு அடுத்தாப்போல் பரிபாலிப்பது சொல்லப்படவேண்டுமாதலால் அது இப்போது சொல்லப்படுகிறது. தவிரவும் முக்யப்ராணருக்கு மிக்க மேன்மையிருப்பதாய் அறிவிக்கப்பட்டிருந்ததும் இப்போது நிரூபிக்கப்படுகிறது. (1) பிறகு பிருகுவின் குமாரராய் விதர்ப்பநாட்டாருமான வைதர்ப்பர் குருவை ப்ரச்னம் செய்தார். பூஜ்யரே! சிருஷ்டியடைந்த ப்ரஜைகளை எத்தனை தேவர்கள் ஸம்ரக்ஷிக்கின்றனர். எத்தனை தேவர்கள் சப்தம் ஸ்பரிசம் ரூபம் ரஸம் கந்தம் ஆகிய விஷயசமூகங்களை பிரஜைகள் அனுபவிக்கும்படி செய்கின்றனர். இந்த தேவதைகளில் மிகவும் மேலானவர் யார் என்று கேட்டார். (2) அந்த பிப்பலாதரென்றவர் இவ்வாறு ப்ரச்னம் கேட்ட பார்க்கவருக்கு பதிலளித்தார், ப்ரஜைகளை பாலிக்கிறவர்கள் அநேகர். அதில் ஆகாசாபிமானியான விக்னேசுவரர் ஒருவர். அப்படியே வாயுதத்வாபிமானியான பூதவாயு, தேஜஸ்தத்வாபிமானியான அக்னி, ஜலதத்வாபிமானியான வருணன், பிருதிவீ தத்வத்திற்கு அபிமானினியான தராதேவி இவர்களும் பாலிக்கிறவர்கள். அதாவது பகவான் செய்யும் பிரஜைகளின் பாலனத்திற்கு இவர்கள் நிமித்தகாரணங்களாகின்றனர் என்று தாத்பரியம். வாக்காகிய இந்திரியத்திற்கு அபிமானியான அக்னி, மனோபிமானியான ருத்திரன், சக்ஷுரிந்திரியத்துக்கு அபிமானிகளான திக் தேவதைகள் இவர்கள் ப்ரகாசத்திற்கு அதாவது ஞானத்திற்கு காரணமானவர்கள். மேலே சொல்லப்பட்டவர்களான பாலனத்திற்கு காரணமான தேவர்களும் பிரகாசத்திற்கு காரணமான இந்த தேவர்களும் ஒருசமயம் ஒருவருக்கொருவர் அகங்காரத்துடன் இறைச்சல்போட்டு வழக்கிட்டுக்கொண்டனர். அதாவது நான்தான் சுதந்திரமாய் தேகத்தை தரிப்பவன் என்று சரீரதாரணம் செய்யும் தேவர்களும் நான்தான் சுதந்திரமாய் விஷயங்களை பிரகாசிப்பவன் என்று ப்ரகாசக தேவர்களும் அகங்

காரப்பட்டுக்கொண்டு சண்டைபோட்டுக்கொண்டனர். (3) அந்த தேவர்களை நோக்கி முக்ய ப்ராணர் பேசினார். தாம்தான் தாரகர்கள் தாம்தான் ப்ரகாசகர்களென்று மோஹமடையாதீர்கள். நான்தான் இந்த சரீரத்திலிருந்துகொண்டு என் ரூபத்தை ப்ராணன், அபானன், சமானன், உதானன், வ்யானன் என்று ஐவகையாய் விபாகம்செய்துகொண்டு இந்த சரீரத்தை ஸ்திரமாய் தாரணம் செய்கிறேன். இதற்கு ஞானத்தையும் தருகிறேன் என்றார். இந்த வாக்யத்தை அவர்கள் நம்பவில்லை. அவர்களுக்கு நம்பிக்கை உண்டாவதற்காக வாயுபகவான் சரீரத்தினின்றும் சற்று உயரக் கிளம்பினார். வாயுபகவான் புருஷசரீரத்தைவிட்டு கிளம்பும்பொழுது மற்ற ஆகாசாதி தேவர்கள் எல்லோரும் சரீர தாரணம் முதலான தம்தம் காரியங்களை செய்யமுடியாமலும் தம்தம் ஸ்தானங்களில் இருக்கமுடியாமலும் அந்த சரீரத்தைவிட்டு உயரக்கிளம்பினார். வாயுபகவான் மீண்டும் கீழேவந்து தம்முடைய இடத்தில் உட்கார எல்லா தேவர்களும் தம்தம் ஸ்தானங்களில்வந்து உட்கார்ந்தனர். (4) அது எப்படி இருந்ததென்றால் ராஜா தேனீயானது தன் ஸ்தானத்தைவிட்டு உயரக்கிளம்பும்பொழுது மற்ற எல்லா தேனீக்களும் அதனுடன் உயரக்கிளம்புகின்றன. அந்த ராஜா தேனீவந்து உட்காந்தவுடன் மற்ற எல்லா தேனீக்களும் வந்து உட்காருகின்றன. இவ்வாறுதான் வாக்கு மனஸ்ஸு சக்ஷுஸ் இதன் அபிமானி தேவதைகளும் மற்றுமுள்ள கர்மேந்திரிய தேவதைகளும் நடந்துகொண்டனர். இந்த தேவர்கள் சந்தோஷப்பட்டவர்களாகி முக்ய ப்ராணரை ஸ்தோத்திரம்செய்தனர். இந்த முக்ய ப்ராணர் அக்னியாகி இருந்து பதார்த்தங்களை தகிக்கும் வேலையைச்செய்கிறார். இவர் சூரியனாக இருந்து ப்ரகாசாதி காரியங்களைச்செய்கிறார். இவர் மழைக்கு அபிமானியான பர்ஜன்யர். இவர் இந்திரன். இவர் பூதவாயு. இவர் பூமிக்கு அபிமானியான தராதேவியும் சனீசுவரருமாகிறார் என்றால் இந்த தேவர்கள் செய்யும் காரியமெல்லாம் முக்ய ப்ராணரின் அதீனமென்று தாத்பரியம். பாரதீ தேவியார் மூர்த்த பதார்த்தங்களின் அபிமானி தேவர்கள், அமூர்த்த பதார்த்தங்களின் அபிமானி தேவர்கள், முக்தர்கள், அமுக்தர்கள் இவர்களெல்லோரும் இவர்தான். இவருடைய அதீனர்களே. (5) எப்படி என்றால்



ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம் முதலிய வேதங்களும் யாகங்களும் க்ஷத்திரியன் பிராம்மணன் முதலான ஜாதிகளும் இவை எல்லாமே முக்ய ப்ராணரிடத்தில் எப்படி ரதத்தின் மத்ய பாகத்தில் அரங்கள் ஆசிரயித்திருக்கின்றனவோ அப்படி ஆசிரயித்திருக்கின்றனர். தக்ஷர் முதலான ப்ரஜாபதிகளிலிருந்து தாம்தான் பிரஜைகளின் சிருஷ்டியைச் செய்கின்றீர். கர்ப்பத்தைப் பிரேரிப்பவர் தாங்கள்தான். ப்ராணிகளின் பிரஸவவேலையைச் செய்பவர் தாங்கள்தான். ஹே முக்ய ப்ராணரே! இந்த பிரஜைகளெல்லாம் தங்களைச்சேர்ந்தவர்கள். ஏனென்றால் தாங்கள் சக்ஷுராதிகளின் அபிமானி தேவதைகளுக்கு சக்தியைத்தந்து அவர்களுடன்கூடி பிராணதாரணையை செய்துகொண்டு இந்த சரீரத்தில் வாசம் செய்துவருகிறீர். தேவர்களுக்கு ஹவிர்பாகத்தைக்கொண்டுபோய்தரும் அக்னியாய் தாங்களிருக்கிறீர். பித்ருக்களுக்கு முக்யமான ஸ்வதாபாகத்தை கொடுப்பவர் தாங்கள்தான். அதர்வாங்கிரஸ்ஸுக்கள் என்னும் ரிஷிகளின் ஆசாரமாகவும் ஸத்ய வசனமாகவுமிருக்கின்றீர். (6 ஹே ப்ராணனே! காந்திபொருந்திய இந்திரன் நீர். ரக்ஷகரான ருத்திரன் நீர். பூதவாயுவிடமிருந்துகொண்டு அந்தரிக்ஷலோகத்தில் சஞ்சரிக்கின்றீர். சனீசுவரர் முதலான நவக்ரஹங்களில் சிரேஷ்டராகிய சூர்யன் நீர். தாங்கள் எப்பொழுது பர்ஜன்யரூபத்தால் மழைபெய்கின்றீரோ அப்பொழுது தங்களைச்சேர்ந்தவர்களான மனுஷ்யர்கள் முதலான இந்த பிரஜைகள் யதேஷ்டமாய் உணவுகள் உண்டாகப் போகின்றனவென்று சந்தோஷத்துடனிருக்கின்றனர். ஹே வாயுதேவா! தாங்கள் விரதத்தில் நிஷ்டையுடையவராய் இருக்கிறீர். அதர்வவேதத்தின் த்ரஷ்டாவான ஏகர்ஷி என்பவரும் நீரே. ஜகத்தை ஸம்ஹாரம் செய்பவரும்நீர்தான். ஸாதுக்களை ரக்ஷிப்பவரும்நீர்தான். நாங்கள் தங்களுக்கு தங்கள் போஜ்யமான பதார்த்தங்களைத் தருபவர்கள் என்றால் தங்களை பூஜிப்பவர்கள். ஹே வாயுபகவானே! தாங்கள் எமக்கு பிதாவாயிருக்கிறீர் அல்லது பூதவாயுக்கு தாங்கள் பிதாவாயிருக்கிறீரென்றும் சொல்லலாம். (7) வாக்குக்கு ஆதாரமாகிய தங்கள் சரீரம் எதுவோ, ச்ரோத்ரியந்திரியத்துக்கும் சக்ஷுரிந்திரியத்துக்கும் ஆதாரமாகிய தங்கள் சரீரம் எதுவோ, மனஇந்திரியத்தில் வியாபித்திருக்கும் சரீரம் எதுவோ, அந்த

தங்கள் சரீரத்தை சாந்தமாய்செய்துகொள்ளுங்கள். கோபித்துக்கொண்டு இந்த சரீரத்தைவிட்டு உயரக்கிளம்பிவிடாதீர்கள். அத்யாத்மகர்களான நாங்களெல்லோரும் முக்ய ப்ராணரான தங்களுடைய வசத்திலேயே இருக்கின்றோம். அப்படியே ஸ்வர்க்கத்திலிருந்துவரும் அதிதைவாதிகளெல்லோரும் தங்கள் அதீனமாகவே இருக்கின்றோம். இதனால் அதிபௌதிகர்களும் தங்கள் வசத்தில்தான் இருக்கின்றன. தாங்கள் எம்மிடமிருந்துகொண்டு பெற்ற தாயார் எப்படி மக்களை ரக்ஷிப்பாளோ அப்படி எங்களை ரக்ஷியுங்கள். ப்ரஜைகளைத் தாங்கும் சோபையையும் அதாவது அதன் சம்பந்தமான ஸாமர்த்தியத்தையும் ப்ரகாசிக்கும் சக்தியையும் அப்படியே புத்தியையும் எங்களுக்கு கொடுங்கள் என்று ஸ்தோத்திரம் செய்தனர்.

2-வது ப்ரச்னம் முடிந்தது.

---

## மூன்றாவது ப்ரச்னம்

(1) பிறகு அச்வலாயனரின் குமாரரான கௌஸல்யர் தமது குருவான பிப்பலாதரைக் கேட்டார். என்னவென்றால் ஆசாரியாளே! மேலேசொன்ன மாகாத்மியமுள்ள முக்யப்ராணர் எந்த புருஷரிடமிருந்து ஜனிக்கின்றார்? இவருக்கு பரமேசுவரனிடமிருந்து ஜன்மமுண்டாவதாய் முதற் ப்ரச்னம் நான்காவது மந்திரத்தில் சொல்லப்பட்டிருப்பினும் இப்பேர்ப்பட்ட மகாத்மியமுள்ள மகானுபாவருக்கு உற்பத்தி என்பது எப்படி சம்பவிக்கிறதென்று ப்ரச்னம் செய்யப்படுகிறது. வாயுபகவான் தாம் தான் இந்த சரீரத்திலிருந்துகொண்டு தங்கள் ரூபத்தை ஐந்தாய் பிரித்துக்கொண்டு இந்த சரீரத்தை தாரணம்செய்கிறேனென்று 2-வது ப்ரச்னம் மூன்றாவது மந்திரத்தில் சொல்லிக்கொண்டிருக்கிறாரல்லவா! அந்த விஷயத்தில் எனக்கோர் சம்சயமிருக்கிறது. ஜீவனின் கர்மத்தால்ஏற்பட்ட இந்த துர்பாக்யசரீரத்தில் கர்மபந்தமில்லாதவரான வாயுபகவான் எந்த காரணத்தால் ப்ரவிருத்திக்கிறார்? தம் ரூபங்களை விபாகம்செய்துகொண்டு எப்படியிருந்துவருகிறார் என்றால் அந்த விபாகங்களான ஐந்து ரூபங்கள் எவை?

 (தொடரும்)



# ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

---

(ஸ்ரீ ஆனந்ததீர்த்த பகவத்பாதாள் செய்தது)

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழிபெயர்ப்பு)

(காபி ரைட்)

ஒன்பதாவது அத்தியாயம்.

(முன் தொடர்ச்சி.)

"ஹே ஈசனே! தமக்கு சதுர்முகன் மகனாவார். நான் தங்களுக்கு பௌத்திரனாவேன். பௌத்திரனின் வாக்யம் சமயத்திற்கு ஒவ்வாததாய் இருந்தபோதிலும் குணவான்கள் அந்த வாக்யத்தை ஆதரிக்கின்றனர். ஆகையால் நான் நமஸ்காரபூர்வமாய் தங்களை இந்த பூமியினின்றும் வைகுண்டத்திற்கு வரவேண்டுமென்று வேண்டுகிறேன். தாங்கள் எந்த காரியத்தை சாதிப்பதற்காக வேண்டி தேவர்களால் பிரார்த்திக்கப்பட்டவராய் இந்த ஸ்ரீராமசந்திரரின் ரூபத்தை விபக்தமாக்கினீரோ அந்த காரியத்தை எல்லாம் தாங்கள் செய்துமுடித்தாகிவிட்டது. ஆகையால் தேவர்களை உற்சாஹப்படுத்திக்கொண்டு சீக்கிரமே பூமியை விட்டு வைகுண்டத்திற்கு பிரயாணம் புறப்படுங்கள்." இவ்வாறு ருத்திரன் ஏகாந்தமாய் சொன்ன எல்லா வார்த்தைகளையும்கேட்டு ஸ்ரீராமர் அப்படியே ஆகட்டுமென்றார்.

இவ்வாறு இவ்விருவர்கள் பேசிமுடிந்தவுடன் ருத்திரபகவானின் மற்றொரு ரூபமாகிய துர்வாஸர் என்ற பெயர்கொண்ட மகரிஷி "பசியுடனுள்ள எனக்கு போஜனம் செய்விப்பாய்" என்று அடிக்கடி சொல்லிக்கொண்டு ஸ்ரீராமரின் சமீபத்துக்கு துரிதமாய் வந்துசேர்ந்தார். "முன் சமைத்திருந்த அன்னத்தை எனக்குத் தரலாகாது. இனி சமைக்கப்போகும் அன்னமும் எனக்கு கூடாது." என்று துர்வாஸர் சொன்ன வார்த்தையைக்கேட்டு அவர் வார்த்தையாடும்போதே ஸ்ரீராகவன் தம்முடைய கையினின்றும் வெளியானதாயும் அமிர்தத்திற்கு ஒப்பானதாயும் பக்ஷ்யம், போஜ்யம், பேயம், லேஹ்யமென்ற நால்வகைகுணமுள்ளதா

யுமுள்ள உத்க்ருஷ்டமான அன்னத்தை துர்வாஸருக்கு அளித்தார். துர்வாஸர் அந்த அன்னத்தைப்பெற்று சந்தோஷமாய் போஜனம் செய்தார். எல்லோரிடமும் கோபமுள்ளவரான தான் கேட்கும் வரத்தை எவனும் கொடுக்கமுடியாதென்று ப்ரதிக்ஞை செய்துகொண்டிருந்த துர்வாஸமகரிஷி ஸ்ரீராமரால் திருப்தியடைந்து புறப்பட்டுப்போனார். பகவான் ஸ்ரீராகவன் தான் துர்வாஸரின் ப்ரதிக்ஞையை வீணாக்கினாரேயல்லாது வேறுயாரும் செய்யவில்லை. ஆனால் குந்திக்கு அவர் மகிழ்ந்தாரென்றால் குந்தி செய்த சேவையால் நான் ஸந்துஷ்டியடைகிறேனென்று அவளுடைய தந்தையான குந்திபோஜனுக்கு துர்வாஸரே வரங்கொடுத்ததால் குந்தி துர்வாஸரை வசமாக்கிக்கொண்டு மந்திரங்களைப் பெற்றாள். த்வாரகைக்குவந்த துர்வாஸரை இந்த ஸ்ரீராகவன் தான் ஸ்ரீக்ருஷ்ணரூபத்தால் தம்முடைய ஸாமர்த்தியத்தாலேயே ஜயித்தார்.

காலரூபியான ருத்திரனும் துர்வாஸரூபியான ருத்திரனும் ஆக இரண்டு ருத்திரர்கள் புறப்பட்டுப்போனபின் ரமாநாயகனான ஸ்ரீராகவன் லக்ஷ்மணனை பிரயாணம் புறப்படும்படி ஆக்ஞையிட்டார். ஸ்ரீராகவன் காலரூபியான ருத்திரனுடன் ஏகாந்தமான இடத்தில் பேசிக்கொண்டிருக்கும்பொழுது லக்ஷ்மணனையே அவ்விடத்திற்கு த்வாரபாலகனாய் ஏற்படுத்தியிருந்தார். “இந்த இடத்தில் எவனாவது பிரவேசித்தானாகில் உன்னைக்கொல்வேன்” என்று சொன்னார். அச்சமயம்தான் துர்வாஸர் அன்னம்வேண்டுமென்று வந்துசேர்ந்தார். அதைக்கண்டு லக்ஷ்மணர் ஆலோசித்து “துர்வாஸரின் பிரதிக்ஞை ஸ்ரீராமரிடம்போய் வீணாகட்டும். அப்படி போகாமற்போனால் ஸ்ரீராமர் சக்தியற்றவரென்று அபகீர்த்தியை துர்வாஸர் நிச்சயமாய் விளைவிப்பார். ஸ்ரீராமர் தனது ப்ரதிக்ஞையைக் காப்பாற்றுவதற்காக என்னைக்கொன்றாலுங்கூட என்னிடம் கருணையையே காட்டுவார்.” என்றிவ்வாறு லக்ஷ்மணர் ஆலோசித்து ஸ்ரீராமர் பேசிக்கொண்டிருந்த ஏகாந்தமான இடத்திற்குச் செல்ல வழியைத்தந்தார். லக்ஷ்மணர் வைகுண்டத்திற்கு போய்விடவேண்டுமென்றும் தாமும்போகவேண்டுமென்றும் ஸ்ரீராகவன் இச்சைப்பட்டிருப்பினும் தாம்செய்யும்





ப்ரதிக்ஞை மேற்கண்ட பிரயாணத்திற்கு காரணமாகவேண்டுமென்றுதான் லக்ஷ்மணனைக்கொல்வதாய் ஸ்ரீராகவன் ப்ரதிக்ஞை செய்தார். அத்யந்தம் சிநேகமுள்ள பந்துவைக்கொல்வதற்கு பதில் அவனை ஒதுக்கிவிடுவதுதானென்று மந்திரிமார்களுடன் பகவான் கலந்துயோசித்து லக்ஷ்மணனை அழைத்து உன்லோகத்திற்கு சீக்கிரமே போய்விடு என்று ஆக்ஞையிட்டார். இவ்வாறு ஸ்ரீராமசந்திரமூர்த்தியால் கட்டளையிடப்பட்ட லக்ஷ்மணர் ஜகத்தின் ஸம்ஸாரபயமாகிய அந்தகாரத்தை போக்குகிறவரான ஸ்ரீராகவனை தியானித்து ஆயிரம் முகங்களுடனாகி முஸலாயுதம் ஹலாயுதம் இவைகளைத் தரித்துக்கொண்டு தேவரூபியான சேஷனென்னும் மகாஸர்ப்பமானார். வைகுண்டலோகம் சென்றார். க்ஷீர சமுத்திரத்தில் படுத்திருக்கும் பகவானுக்குக் கட்டிலானார்.

பிறகு ஸ்ரீராகவன் தம்முடைய பக்தகோடிகளுடன் வைகுண்டம்செல்ல மனங்கொண்டார். இந்த கர்மபூமியாகிய பரதகண்டத்தில் அதிகாரியாயுள்ளவனெவன் அழிவில்லா வைகுண்டத்தை அபேக்ஷிக்கிறானோ அவன் சீக்கிரமே என்னுடன் வரட்டுமென்று ஸ்ரீராகவன் எங்கும் பறையடிக்கச் செய்தார். இந்த பறை முழக்கத்தை கேட்டுவிட்டு மோக்ஷத்தில் விருப்பங்கொண்டிருந்த திருணஜீவர்கள், எறும்பு முதலான ஜீவர்கள் முதற்கொண்டு ஸ்தாவர ஜங்கம சரீரமுள்ள எல்லா ஜீவர்களும் அயோத்திநகரத்திற்கு வந்தனர். திருணாதிஸ்தாவரங்கள் நடந்துபோகும் சக்தி ஸ்ரீராகவனுடைய ஆக்ஞையால் ஏற்பட்டது. எவர்கள் நித்யஸம்ஸாரி ஜீவர்களோ அவர்கள் மோக்ஷத்திற்குச்செல்ல விரும்பவில்லை. அப்படி மோக்ஷத்தை விரும்பாதிருந்த மீதி ஜனங்களுடன்கூடிய தனது ராஜ்யத்தில் தன் மகனான குசனை மகாராஜாவாய் ஏற்படுத்தினார். அவனுடைய தம்பியான லவனை யுவராஜாவாக ஏற்படுத்தினார். அப்பொழுது சுக்ரீவன் வாலிகுமாரனான அங்கதனை கபிராஜ்யத்தில் ஸ்தாபித்துவிட்டு சீக்கிரமே ஸ்ரீராமருடைய ஸன்னிதானத்திற்கு வந்துசேர்ந்தான். பிறகு ஸ்ரீராமசந்திரன் ஹனுமாரை தழுவிக்கொண்டு பேசினார். “ஹே ஹனுமந்தா! நான் எப்பொழுதும் உன் கண்களுக்கு தென்பட்டு

வருகிறேன். இது எப்போதும் மாறாது. நீ எப்பொழுதும் உத்தமோத்தமமான மகா தபஸ்ஸை செய்துகொண்டிருக்கவேண்டும். வெகுகாலமாய் நீ செய்த தபஸ் எனக்கு மிகவும் பிரியமாயிருக்கிறது. நீ பூர்ணமான சக்தியைக்கொண்டிருந்தும் என் ப்ரீதியின் பொருட்டு ராவணன் கும்பகர்ணன் இவர்களை நீ கொல்லாமலிருந்ததுபோல் என்ப்ரீதியின்பொருட்டு நீ சதுர்முகனின் ஓர் தினகல்பம்வரை உயிரைத் தரித்திரு. நீ இந்த வானரசரீரத்துடனேயே க்ஷீரசமுத்திரத்தின் மத்தியிலுள்ள சுவேதத்வீபம் அனந்தாஸனம் வைகுண்டம் ஆகிய என் ஸ்தானங்களுக்கு உன் இச்சைப்படி வந்து போவாய். உனதிஷ்டப்படி போகயுக்தனாய் தேவகந்தர்வர்கள் முதலானவர்களால் துதிக்கப்பெறும் நற்கீர்த்தி படைத்து ஸதா என் ஸன்னிதியிலேயே விளங்குவாய். உனக்கு இஷ்டமானது எதுவாகிலும் அது எந்த காலத்திலும் எந்த இடத்திலும் கிடைக்காமற் போகவேண்டாம். ஒவ்வொரு கல்பத்திலும் நீ எனக்கு ப்ரியனாகவே இருக்கப்போகிறாய்.'' என்றிவ்வாறு ஸ்ரீராகவனால் சொல்லப்பட்ட ஹனுமார் ஜகதீசுவரரான ஸ்ரீராமசந்திரமூர்த்தியைப்பார்த்துச்சொன்னார் ''ஹே ஈசா! தங்கள் திருவடித்தாமரைகளில் உத்தமமான பக்தியைத்தாரும். பிரதிக்ஷணமும் வளர்ந்துவரும் அந்த பக்தியால் நான்கண்டு களிக்கிறேன். தேவரீரிடமுள்ள பக்தி எல்லா ஜீவராசிகளைவிட என்னிடம்தான் அதிகமாய் இருக்கவேண்டும். ஹே ராமா! நமஸ்காரம். நமஸ்காரம். மீண்டும் நமஸ்கரிக்கிறேன். நமஸ்கரிக்கிறேன். ஸகல கல்யாணகுணங்கள் நிறைந்த மேலான தேவரீர் திவ்யமங்கள விக்ரஹத்திற்கு நமஸ்காரம் செய்கிறேன். மீண்டும் தங்கள் திருவடிகளைப்பணிகிறேன்'. இவ்வாறு ஹனுமார் சொல்லவும் கமலம்போன்ற கண்ணுள்ள ஸ்ரீராகவன் சரிதானென்று சொன்னார். திருணஜீவாதி எல்லா ஜீவராசிகளுடன் பகவான் தம்முடைய ஸ்தானமான வைகுண்டத்திற்கு பிரயாணம் புறப்பட்டார். அப்பொழுது பக்ஷிகளும் மிருகங்களும் திருணங்களும் கொடிகளும் செடிகளும் எறும்புகளும் கழுதைகளும் கூட திவ்யசரீரம் கொண்டவர்களாயினரென்றால், மனுஷ்யர்களும் வானரங்களும் எவ்வாறு மாறினர் என்று சொல்லவும் வேண்





டுமோ? இந்த ஜீவர்கள் ஸதா ஸ்ரீராமத்யானம் செய்து ஸ்ரீராமரின் ஸ்வரூப ஞானத்தை அடைந்திருந்ததால் இச்சமயம் பகவானுடைய ஸ்தானத்தை அடைந்தனர். இதனால் பகவத் ஞானத்தால்தான் மோக்ஷமுண்டு என்பது வெளியாகிறது. பிரம்மஞானிகளான ஜீவர்களுடன்கூடி ஸ்ரீராமசந்திர ப்ரபு அயோத்தியைவிட்டு வடதிசை சென்றார். பகவான் அனந்த சூர்ய ப்ரகாசமான காந்தியுடன் ஜொலித்தார். நாசமற்ற குணங்களுக்கு ஸமுத்திரம்போன்றவர். ஆயிரம் சூரிய மண்டலங்களைப்போல் பிரகாசிக்கும் கிரீடத்தைக்கொண்ட கேசங்களுள்ளவர். மிகவும் கறுத்திருந்த சுருட்டைமயிர்கள் வியாபித்து அனந்த சந்திரன்களுக்கு ஸமானமான காந்திபொருந்திய அழகிய திருமுகமுள்ளவர். சிகப்பு மிகுந்த கமலம்போன்ற கண்ணுள்ளவர். மின்னற்கொடிபோல் மினுமினுக்கும் கர்ணகுண்டலமுள்ளவர். மந்தஹாஸம் பொருந்தி பவழம்போல் பிரகாசிக்கும் உதடுள்ளவர். ஸகல வேதாத்மகமான மேலான வசனமுள்ளவர். சூர்யர்களின் கூட்டத்திற்கு சமான காந்திமிகுந்த கௌஸ்துபமென்னும் மணியை இன்னமும் பிரகாசப்படுத்தும் அழகிய கழுத்துள்ளவர். மிகவும் பருத்து உயர்ந்து சிறந்து தோஷமற்று ஜகத்தைப்போஷிக்கும் இரு தோட்களுள்ளவர். உருண்டு திரண்டு முழங்கால்வரை நீண்டு பருத்து பிரகாசிக்கும் இருபுஜங்களுள்ளவர். இப்பேர்ப்பட்ட ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் வலதுகையில், ஓர் பாணமிருந்தது. அது ஜகத்தையே கலக்கினது. வாயுபகவானின் ஸ்வரூபமானது. பகவானாலேயே சுயம் நிர்மாணம் செய்யப்பட்டது. மதுகைடபர்களை ஆதியில் சம்ஹாரம்செய்த பாணம் இதுவே. அந்த பாணத்தை பகவான் லக்ஷ்மணரின் தம்பியான சத்ருக்னனுக்கு கொடுத்தார். அதனால் சத்ருக்னன் மதுவென்னும் தானவனுடைய மகனான லவணாஸனென்னும் பெயருள்ள லவணாஸுரனை ஸம்ஹாரம் செய்தான். அவன் வசித்திருந்த மதுவனத்தை சத்ருக்னன் மதுராபட்டணமாகச் செய்தான். ஸர்வ ஜீவோத்தமரான வாயுபகவானின் ஸ்வரூபமான அப்பேர்ப்பட்ட அந்த பாணத்தை ஸ்ரீராமர் வலதுகையில் தரித்தார். இடதுகையில் சாரங்கமென்னும் தனுஸ்ஸைத் தரித்தார். உத்

கிருஷ்டமான பாஜூபந்துக்களென்ன, அழகிய தோள்வளைகளென்ன, உத்தமமான மோதிரங்களென்ன இவைகளால் பூஷிதமான மிகவும் சிவந்தகராரவிந்தங்களுடனிருந்தார். ப்ரபுவான ஸ்ரீராகவன் விலையிலா ரத்னஹாரங்களென்ன வனமாலையென்ன இவைகளால் விளங்கிய அகன்ற மார்பில் ஸ்ரீலக்ஷ்மீதேவியைத் தரித்தார். இவ்வாறு ஸ்ரீவத்ஸபூஷிதராய் மெல்லியதான வயிற்றில் மூன்று மடிப்பை தரித்திருந்தார். உத்கிருஷ்டமான அரிஞானத்தை அணிந்திருந்தார். கண்களைப் பறிக்கும் மின்னற்காந்திபோன்ற வஸ்திரமுடுத்திருந்தார். பருத்த யானையின் துதிக்கைக்குச் சமானமான தொடைகளுடன்கூடியிருந்தார். நன்கு உருண்டதான முழங்கால்களுடனிருந்தார். கிரமமாய் வரவர சிறிது உருண்டுவந்த கணைக்கால்களுடனிருந்தார். நன்றாய் சிவந்ததாய் கோமலமான பாதங்களுடனிருந்தார். விளங்கும் இந்திரநீலமாணிக்கம்போல் தேககாந்தியுடனிருந்தார். கணக்கற்றதான நற்சுகங்களுக்கு சமுத்ரமானவர். ஸமஸ்த சக்தியின் ஸ்வரூபமானவர். திவ்யசரீரம் படைத்தவர். அந்த பகவான் ஸ்ரீராமசந்திரன் இன்னமும் அதிகமாய் இவ்வாறு விளங்கினார். தன் இரு கமலக்கண்களால் ஞானத்தை அதை அபேக்ஷிக்கும் ஜனங்களுக்கு தந்துகொண்டும் தன் திருமுகத் தாமரையால் ஸமஸ்த வேதங்களின் அர்த்தவிசேஷங்களை போதித்துக்கொண்டும் மகா காந்திபொருந்திய தன் சரீரத்தால் பிரம்மாண்டத்தின் உள்ளும் புறமும் விளக்கிக்கொண்டும், தன் இரு திருக்கைகளால் யாசக ஜனங்களுக்கு ஸமஸ்த அபீஷ்டங்களையும் அபயத்தையும் அளித்துக்கொண்டும், பிரகாசிக்கும் முகாரவிந்தமுள்ள தேவாதிதேவரான பகவான் ஸ்ரீராமசந்திரன் தம்முடைய லோகத்தைநோக்கி துக்கமில்லாத வடதிசைக்குப் புறப்பட்டார். அப்பொழுது ஸ்ரீராகவனுக்கு ஹனுமார் அமிர்தத்தைப் பெருகவிடுவதாயும் பதினாயிரம் பூர்ணசந்திரன்கள் போல் காந்தியுள்ளதாயுமுள்ள வெண்குடையைப் பிடித்தார். முன்பு பூமியை பிரவேசித்திருந்த சீதை அப்பொழுது எல்லா ஜனங்களின் கண்ணெதிரில் ஸ்ரீதேவி என்றும் பூதேவி என்றும் பேதமில்லாததான இரண்டு ரூபங்களைத் தரித்து வெளிவந்து ஸ்ரீராமருடைய இரண்டு பக்கங்களில்





நின்று உதயமடைந்த சூர்யனைப்போல் காந்தியுள்ளவளாய் ஸமஸ்தகுண ஸ்வரூபளாய் தன்னுடைய ஆபரணங்களால் அலங்கிருதளாய் பூர்ணசந்திரனின் கிரணங்களைப்போன்ற வெண்மையான சாமரங்களால் வீசினாள். முன்பு சக்ராயுதத்திற்கு அபிமானியான பரதன் இச்சமயம் சக்ராயுதத்தைத் தரித்துக்கொண்டு ஸ்ரீராகவனுடைய வலதுபுறத்தில் புறப்பட்டார். சங்கத்திற்கு அபிமானியான சத்ருக்னன் பாஞ்சஜன்யசங்கத்தை எடுத்துக்கொண்டு ஸ்ரீராமருடைய வலதுபுரத்தில் புறப்பட்டார். பிரம்மாதி தேவஸமூகங்களும் ஓங்காரத்துடன் சேர்ந்த வேதங்களின் அபிமானிதேவதைகளும் ஸ்ரீராகவனுக்கு முன்னாடி புறப்பட்டனர். தம்முடைய சொந்த ஸ்தானமாகிய வைகுண்டத்திற்கு பிரயாணம் புறப்பட்ட ஸ்ரீராமனுக்கு பின்புறத்தில் திருணாதி எல்லா ஜகத்துமே கிளம்பின. பகவானுடைய ஸ்ரீராமாவதார சரித்திரங்களை உரக்கத்துதித்துக்கொண்டு ஸுக்ரீவாதி வானரங்கள் ஸ்ரீராகவனுடைய வலதுபுறத்தில் சீக்கிரம் புறப்பட்டனர். மனுஷ்யர்கள் இடதுபுறத்தில் சென்றனர். சதுர்முகனை முன்னிட்ட தேவர்களென்ன ரிஷிகளென்ன இவர்களால் உத்கிருஷ்டமான வேதவாக்யங்களால் எப்போதும் துதிக்கப்பெற்றவராய் கந்தர்வர்களால் பாடப்பட்டவராய் புஷ்பவிருஷ்டிசெய்துகொள்ளப்பட்டவராய் எல்லா ஜனங்களாலும் ஆச்சரியத்தாலும் பக்தியாலும் இமைகொட்டாமல் தரிசிக்கப்பட்டவராய் ஸ்ரீராமர் சேஷகருடாதிகளான தங்கள் துவாரபாலகர்களால் சேவிக்கப்பட்டதான தம்முடைய வைகுண்டத்திற்கு புறப்பட்டார். பிரம்மா, ருத்திரன், கருடன், சேஷன் இவர்களால் சொல்லப்பட்ட உத்கிருஷ்டமானதாய் விஸ்தாரமான நற்குணங்களுள்ளவராய் ப்ரபுவான ஸ்ரீராமர் மெதுவாய் ஆகாயத்தில் உயரக்கிளம்பினார். அவருடன் வந்தவர்களுக்கு அப்பொழுது திவ்யதேஹம் உண்டாயிற்று. பிறகு சதுர்முகன் ஸ்ரீராகவனை ஸ்தோத்திரம்செய்து இந்த வார்த்தையாடினார். “ஹே ராமா! தங்கள் ஆக்ஞையின் பேரில் தசரதராஜனுக்கு திவ்யமான ஸ்தானத்தைத் தந்தேன். இன்றைக்கு பதினாயிரம் வருஷத்திற்குமுன்பு கௌஸல்யை முதலான தங்கள் தாய்மார்களுக்கு தசரதராஜனுடைய லோகத்தை

யே தந்தேன். தசரதராஜனுடைய லோகத்தை அடைய யோக்யதை இல்லாத கைகேயி தேவிக்கும் அவள் பரதனைபெற்றுவிட்டு நரகத்தை அடையலாகாதென்ற அபிப்பிராயத்தால் நற்கதியைத் தரும்படி ஸ்ரீராமா! தாங்கள் ஆக்ஞையிட்டிருந்தீர். ஆயினும் அந்த கைகேயிதேவி எந்த தைத்யஸ்திரீயின் ஆவேசத்தால் தங்கள் விஷயத்தில் தங்கள் பட்டாபிஷேகத்தின் விக்னரூபமான அசுபகாரியத்தைச் செய்தாளோ அந்த நிகிருதி என்ற தைத்ய ஸ்திரீயை நித்யதமஸ்ஸில் நான் வீழ்த்தினேன். கைகேயி தங்கள் பட்டாபிஷேகத்திற்கு விக்னம் செய்ததால் ஸ்திரமாயில்லாததான லோகத்தை அடைந்தாள். கௌஸல்யை ஸுமித்திரை இவர்களைப்போல் உடனே ஸ்திரமானலோகத்தை அடையவில்லை. தைத்யாவேசம் விலகியபிறகு தங்களிடம் அவள் பக்தியைக்கொண்டதால் பிறகு அவள் ஸ்திரமான லோகத்தை அடைந்தது யுக்தமே. மகாதோஷமுள்ள காரியத்தைச்செய்த மந்தரையை அந்தம் தமஸில் போட்டேன். சீதையைக்குறித்து தங்களை நிந்தித்த ஸுராணகாளென்னும் தைத்யர்கள் அந்தம் தமஸ்ஸை அடைந்தனர். ராக்ஷஸர்கள் அநேகமாய் அந்தம்தமஸ்ஸை அடைந்துவிட்டனர். மீதியுள்ள ராக்ஷஸர்கள் தாங்கள் கிருஷ்ணவதாரம் செய்தபின் தமஸ்ஸை அடையப்போகின்றனர். அப்பொழுதும் மீதிபடும் ராக்ஷஸர்கள் வைவஸ்வத மன்வந்தரத்தில் இருபத்தெட்டாவது கலியுகத்தில் நாலாயிரத்துமுன்னூறு வருஷமானபின்பு தமஸ்ஸை அடையப்போகின்றனர். தங்கள் திருவடித்தாமரைகளின் மகரந்தத்தில்மட்டில் ஆசைகொண்டவர்களாய் தங்களுடன் எந்த ஜீவர்கள் வந்திருக்கின்றனரோ அவர்களுக்கு உத்தம லோகத்தை அளிப்பீர். நானும் பரமசிவனும் இந்திராதி தேவர்களும் தங்களுக்கு அடியார்கள். ஹே ஈசஞ ராமசந்திரா! நம்மால்செய்யப்படவேண்டிய காரியமென்னதென்பதை சீக்கிரமே கட்டளையிடுங்கள்." என்றிவ்வாறு ருத்திராதிகளைவிட நூறுமடங்கு ஆனந்தம் மிகுந்திருக்கும் பிரம்மா சொன்ன வார்த்தையை ஸ்ரீராமர்கேட்டு புன்சிரிப்புடன்கூடிய தளிர்போன்ற உதடுள்ளவராய் அர்த்தபூர்ணமான வார்த்தையை ஆடினர்.

(தொடரும்)





# துவாதச ஸ்தோத்திரம்.

(ஸ்ரீ ஆனந்த தீர்த்த பகவத்பாதாள் இயற்றியது.)

---

(1) பகவான் ஸ்ரீவாஸுதேவரை வணங்குகிறேன். அவர் எல்லோராலும் வணங்கத்தகுந்தவர். ஸாதுக்களை ஸந்தோஷப்படுத்துகிறவர். அக்ஞானாதி தோஷமற்றவர். வரதானம் செய்யக்கூடியவர்களான பிரம்மா ருத்திரன் முதலியவர்களுக்கும் வரத்தைக் கொடுப்பவர். சாக்ஷாத் லக்ஷ்மிதேவியாருக்கு பதி. (2) பிரம்ம ருத்திராதி எல்லா தேவ ச்ரேஷ்டர்களும் வணங்க அவர்களின் கிரீடம் உறைந்து அழுந்திய பாதபீடமுள்ளதும் மனதின் அக்ஞான இருளைப்போக்குவதில் சூரியனைப்போன்றதுமான ஸ்ரீய:பதியின் சரணகமலத்தை நமஸ்கரிக்கிறேன். (3) பகவான் ஸ்ரீஹரியின் இடுப்பை இவ்வாறு த்யானம்செய்யவேண்டும். அது ஸுவர்ணமயமான வஸ்திரத்திற்கு ஆதாரமாயிருக்கிறது. என்றால் அதில் ஸுவர்ணமயமான வஸ்திரம் கட்டப்பட்டு பிரகாசிக்கிறது. ஸுவர்ணமயமான அரிஞானம் அதை சுற்றியிருக்கிறது. ஜகன்மாதாவான மகாலட்சுமி அதை ஆசிரயித்திருக்கிறாள். (4) பகவானின் உதரத்தை இவ்வாறு தியானம்செய்யவேண்டும். அது மிகவும் மெல்லியதாயிருந்தபோலும் ஜகத்தை எல்லாம் அடக்கிக் கொள்ளக்கூடியது. மூன்று மடிப்புகளை அடையாளமாகக் கொண்டிருக்கிறது. எப்போதும் மகா லக்ஷ்மி ஒருவளாலேயே தழுவப்பட்டிருக்கிறது. (5) ஜகதீசுவரரான ஸ்ரீஹரியின் வக்ஷஸ்ஸை இவ்வாறு தியானம் செய்யவேண்டும். அது லக்ஷ்மீதேவியாரின் வாசஸ்தலமாகும். அது ஆதியந்தமில்லாதது. ஆதியந்தமுள்ளதுபோல் காணப்படும் புஜங்களின் நடுவிலுள்ளது. (6) ஸ்ரீஹரியின் புஜங்களை இவ்வாறு த்யானம் செய்யவேண்டும். அவைகள் சுதர்சனமென்னும் சக்ரம், பாஞ்சஜன்யமென்னும் சங்கம், கௌமோதகி என்னும் கதை, தாமரை புஷ்பம் இவைகளை தரித்திருக்கின்றன. அவைகள் உருண்டு திரண்டு இருக்கின்றன. எப்போதும் ஜகத்தைஸம்ரக்ஷிப்பதுதான்

பிரதானமான கார்யமாகக் கொண்டிருக்கின்றன. (7) விகுண்டா தேவியின் குமாரரான ஸ்ரீ ஹரியின் கண்டத்தை எப்போதும் இவ்வாறு த்யானம் செய்யவேண்டும். அது மிகவும் பிரகாசிக்கும் கௌஸ்துபமென்னும் மணியைப் பிரகாசப்படுத்துகிறது. எல்லா வேதங்களும் இதினின்றும் எப்போதும் உச்சரிக்கப்படுகின்றன. (8) ஸ்ரீ ரமாநாயகரான ஸ்ரீ ஹரியின் முகாரவிந்தத்தை இவ்வாறு த்யானம்செய்யவேண்டும். அது ஆயிரக்கணக்கான சந்திரர்களைப்போல் அமிதமான காந்தியுடனிருக்கிறது. மூவகை ஸம்ஸாரதாபங்களையும் போக்குகிறது. அனைவராலும் துதிக்கக்கூடியது. (9) கோவிந்தனான சர்வேசன் ஸ்ரீ ஹரியின் மந்தஹாஸத்தை இவ்வாறு தினம் சிந்திக்கவேண்டும். பூர்ணமானதும் சாமான்யமாயில்லாததுமான ஆனந்தத்தால் விளங்கிவருகிறது. நித்யானந்தமுள்ள மோக்ஷபதவியைத்தருவது. (10) பூர்ணமான ஆனந்தமுள்ள ஸ்ரீராமசந்திரனுடைய கிருபாகடாக்ஷத்தை இவ்வாறு நான் சிந்திக்கிறேன். அது ஸம்ஸார தாபத்தின் அழிவைத் தருவதான அமிர்தத்தால் கடல்போல் நிறைந்திருக்கிறது. (11) ஸர்வேசனான ஸ்ரீ ஹரியின் புருவங்களின் விலாஸத்தை எப்போதும் இவ்வாறு த்யானம் செய்யவேண்டும். இது கமலத்தினின்றும் உற்பவித்த பிரம்மா முதலானவர்களால் பூஜிக்கப்படுகிறது. பிரம்மபதவி முதலான ஸ்தானங்களைக்கொடுத்து மோக்ஷத்தைத்தருவது. (12) அந்தமில்லாததால் அனந்தனெனப்படும் ஸ்ரீ ஹரியை நான் எப்போதும் ஸ்மரிக்கிறேன். மரணகாலத்திலோ விசேஷமாய் ஸ்மரிக்கிறேன். பிரம்மாதிகள் இவருடைய குணங்களை எவ்வளவு சொல்லியும் அவைகளின் முடிவை அவர்கள் அடையவில்லை.

முதல் அத்யாயம் முடிந்தது.

---

(1) சாதுஜனங்களென்றும் சமுத்திரத்தைப் பொங்கச்செய்யும் பூர்ணசந்திரனாகவும் குணங்களுக்கு ஸமுத்திரம் போன்றவராயும் பூர்ணமான ஆனந்தங்கள் நிறைந்தவருமான ஸ்ரீரமாநாதன் நம்மிடம் ப்ரீதிசெய்யட்டும். (2) மகாலட்சுமிதேவியா



ரென்றும் சகோரபக்ஷிக்கு சந்திரன்போன்றவரும் அஸுரஸ்வபாவமுள்ளவர்களின் கர்வத்திற்கு பாடவாக்னி போன்றவரும் சாதுக்களாகிற வழிப்போக்கர்களின் தங்குமிடமானவருமாகிய ஹே நாராயணா! உமக்கு நமஸ்காரம். (3) சேதனம் அசேதனமென்று இருவகையான எல்லா பிரபஞ்சத்தையும் சிருஷ்டித்தும் சம்ரக்ஷித்தும் சம்ஹரிப்பவரும் விகாரமற்றதான வைகுண்டாதி ஸ்தானங்களிலிருப்பவருமான ஸ்ரீ லக்ஷ்மீகாந்தனுக்கு நமஸ்காரம். (4) பூர்ணமான க்ஞானாதிகுணங்களால் சிரேஷ்டராயிருப்பினும் எப்போதும் மகாலட்சுமியால் மந்தஹாஸத்துடன் பார்க்கப்படுகிறவரான அந்த ஸ்ரீ ஹரியை நான் நமஸ்கரிக்கிறேன். (5) எவன் எல்லா ஜகத்தையும் தன் வசத்தில் வைத்துக்கொண்டிருக்கிறானோ, எவன் மற்றயாருடையவும் சுவாதீனத்திலில்லையோ, எவன் ஒருவராலும் ஜயிக்கப்படாதவனோ, எவன் எல்லாவற்றையும் ஜயித்திருக்கிறானோ எவன் ஜகத்தை எல்லாம் சிருஷ்டித்தவனோ, எவன் மற்ற யாவராலும் செய்யப்பட்டவனல்லவோ, அப்பேர்ப்பட்ட ரமாநாயகனை நான் நமஸ்கரிக்கிறேன். (6) பிரகிருதி குணங்களில்லாதவனும், ஆனால் அப்ராகிருதமான ஞானானந்தாதி குணங்கள் மிகுந்தவனும், ஆதிகர்த்தாவும், பலவாறு தோல்வியடைந்த சத்ருசமூகமுள்ளவருமான ஸ்ரீவாஸுதேவராகிய உமக்கு நஸ்காரம். (7) ஆதிதேவனும் ஸர்வதேவதைகளின் ரக்ஷகனும் சத்ருக்களை தொலைத்தவரும் அநாதியான அவித்தையை பரிஹரிப்பவரும் உத்தமர்களைவிட உத்தமருமான ஹே நாராயணா! உமக்கு நமஸ்காரம். (8) அஸுரர்களை எல்லாம் ஜயித்தவரே! கருடனை த்வஜத்தில் கொண்டவரே, ஜனனமில்லாதவரும் இந்த நித்யாநித்யமான எல்லா பிரபஞ்சத்தை உண்டுபண்ணுகிறவரும், எல்லா அஸுரர்களையும் வென்றவரும் பிரம்மாதிகளால் ஆராதிக்கப்படும் சரணமுள்ளவருமான ஹே நாராயணா! உமக்கு நமஸ்காரம். (9) மகாலட்சுமியின் பூர்ணமானதும் பக்தியாதிகள் நிறைந்ததும் மேலானதுமான கடாக்ஷத்தால் நன்கு பார்க்கப்படும் சொரூபம் படைத்தவரும் என்னைப்போன்ற பக்தர்களின் அபீஷ்டங்களை பூர்த்திசெய்து கொடுப்பதுதான் முக்கிய அலுவலாக உள்ளவரும் பரிபூர்ணருமான ஸ்ரீ ஹரிக்கு நமஸ்காரம்.

இரண்டாவது அத்தியாயம் முடிந்தது.

208681

# கும்பகோணத்தில் நடைபெற்ற

# துவைதாத்வைத விசார சபை.

---

ஸ்ரீஉத்தராதிமடாதிபதி ஸ்ரீமத் ஸத்யதியான தீர்த்த ஸ்வாமிகள் இந்நகருக்கு திக்விஜயம்செய்த மறுநாளே இங்கு பிரமுகர்களாயுள்ள மூன்று மதத்தினர்களான எல்லா லௌகிக வைதிகர்களுக்கும் நிரூபமனுப்பச் செய்தார். ஸ்ரீஸ்வாமிகளை தரிசித்துப்போக அநேகர் வந்துசேரவும், ஸ்ரீஸ்வாமிகள் தாம் த்வைதாத்வைத விவாதத்தை 4–3–31உ முதல் நடத்த உத்தேசித்திருப்பதாகவும் இந்நகர் லௌகிகவைதிக ப்ரமுகர்கள் அந்த ஸபை செவ்வனே நடைபெறும்படியான தகுந்த ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்றும் அறிவித்தார். பிறகு ஸ்ரீமான்களான புரொபஸர் சுந்தரராமய்யர், எம்.ஏ.; என். அப்புராவ், பி.ஏ.,பி.எல்., (அட்வொகேட், மதராஸ்); ஜீ. வி. வெங்கட்டராமய்யர், பி.ஏ.,பி.எல்; கே. டி. சேஷாத்திரி அய்யங்கார், பி.ஏ.,பி.எல்.; ஆர். நரஸிம்ஹ ராவ், பி.ஏ., பி.எல்; ஸி. என். குருஸாமி சர்மா, பி.ஏ.,பி.எல்.: இவர்கள் ஓர் கமிட்டியாக இருந்து ஸ்ரீஸ்வாமிகள் நடத்த எண்ணங்கொண்டிருக்கும் துவைதாத்வைத விவாதம் நடைபெறச்செய்வதாகவும், இந்த ஸபை திவான்பகதூர் R. ரகுநாதராயரின் பப்ளிக் லைப்ரெரி ஹாலில் 4–3–31உ முதல் சுமார் ஒருமாதம் பிரதிதினம் மாலை 6-மணிமுதல் 8½-மணிவரை நடக்குமென்றும் வேதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை ஆகிய ப்ரஸ்தான த்ரயங்களை ஆதாரமாய்க்கொண்டிருப்பது துவைதமா அல்லது அத்வைதமா என்பது விவாதிக்கப்படுமென்றும் இந்நகருக்கு சமீபத்திலோ தூரத்திலோ உள்ள எல்லா வித்வான்களும் ஞானபிவிருத்திக்குக் காரணமான இந்த சந்தர்ப்பத்தைக் கைவிடாமல் அவசியம்வந்து இந்த விவாதம் நடைபெறச்செய்ய வேண்டுமென்றும் அவ்வாறு வரும் பிரமிதர்களான பண்டிதர்களுக்கு பிரயாணச் சிலவுடன் ரூ 50 சன்மானம் செய்யப்படுமென்றும் மற்றும் பல விபரங்களுங்கண்டு ஓர் அறிக்கையை வெளியிட்டனர். அந்த அறிக்கை ஹிந்துமுதலான பெரிய பத்திரிகைகளில் பிரசுரமாயிற்று. துண்டுபிரசுரங்கள் மூலமாய் இந்நகரிலும் வெளியூர்களிலும் இந்தவிஷயம் பிரசித்



தப்படுத்தப்பட்டது. அகில இந்தியாவிலுள்ள அநேக லௌகிகர்கள் வைதிகர்கள் வித்வான்கள் ஸமஸ்தானாதிபதிகள் மகாராஜாக்கள் முதலியவர்களுக்கும் தபால்மூலமாய் அறிவிக்கப்பட்டது. 4–3–31உ அன்று இந்நகரிலுள்ள வலங்கிமான் டிஸ்டிரிக்ட் முன்சீப் ஸ்ரீமான் K. பாலாஜிராவ் வீட்டில் பிக்ஷையைப்பெற்று ஸ்ரீஸ்வாமிகள் அறிக்கையில்கண்டபடி குறித்த நேரத்தில் சபையைத்துவக்கினார். சபையின் நடவடிக்கைகளின் விபரம் தனியாக இம்மாத்வமித்திரனின் பத்திராதிபர் ஸ்ரீ-ம-வே. பாகவத ரங்கனாதாசாரியாரால் விஸ்தாரமாய் எழுதப்பட்டிருப்பதால் அதைப்பற்றி நாம் அதிகம் எழுதவேண்டியதவசியமில்லை. ஸபைக்கு நம்மவர்கள் வெளியூரிலிருந்தும் ஏராளமாய் வந்திருந்ததுமன்றி அத்வைத பண்டிதர்களும் சரியே, விசிஷ்டாத்வைத பண்டிதர்களும் சரியே, இந்த மதத்தினர்களான லௌகிகர்களும் சரியே பெருங்கூட்டமாகவே வந்துகொண்டிருந்தனர். ஸபையில் ஸமஸ்கிருதத்திலேயே விவாதம் நடந்ததாயினும் ஸாமானியர்களுக்கு அது நன்குவிளங்க அப்போதைக்கப்போது அவரவர்கள் சொல்லும் பக்ஷப்ரதிபக்ஷிகள் கும்பகோணம் காலேஜ் ஸம்ஸ்கிருதபண்டிதர் அபிநவபட்டபாண ஸ்ரீ-உபய-வே. R. V. கிருஷ்ணமாசாரியாரென்னும் விசிஷ்டாத்வைத பண்டிதரால் வெகு அழகாய் சொல்லப்பட்டுவந்தது. அதனால் ஸாமானியர்களுக்கும்கூட வாக்யார்த்தங்கள் சரியாய் அர்த்தமாகி வந்தன. நாளடைவில் ஸ்ரீஸ்வாமிகளின் வாதம் வலுத்து வருவதும் பிரம்மஸ்ரீ ஜகதீசுவர சாஸ்திரி முதலியவர்களின் வாதம் துர்பலமாவதும் நன்கு கண்டுகொள்ளப்பட்டது. ஸ்ரீமான் சுந்தரராமய்யர் "நான் இந்த அர்த்தத்தை ஒப்புக்கொள்வதில்லை" என்றும், மதராஸ் அட்வொகேட் சேஷகிரிசாஸ்திரி "லோகசித்த நியாயங்களை விட்டுவிடுவதோ" என்றும், பிரம்மஸ்ரீ ஜகதீசுவரசாஸ்திரிகளின் வாதத்தையே ஆக்ஷேபித்துச்சொன்னதும் மேற்படி சாஸ்திரிகளே தாம் துவக்கிய வாதத்தைவிட்டு எனக்கு "அதாதோ பிரம்மஜிக்ஞாஸா என்னும் சூத்ரார்த்தத்தை விசாரிக்க அபிலாஷை இருக்கிறதென்று" சொன்னதும் அத்வைதிகளின் வாதம் ஓங்கவில்லை என்னும் வதந்தியை எங்கும் அதிகமாய் கிளப்பிவிட்டது. ஸ்ரீஸ்வாமிகள் மகாபண்டிதரென்றும் அத்வைதம் அவைதிகமென்று ஸ்தாபித்துவருகிறாரென்றும் ஸாமானியர்கள் கோயில்களிலும் ஆற்றங்கரையிலும் கடைவீதியிலும் நாற்சந்திகளிலும்கூட தாராளமாய்ப் பேசிவந்தனர்.

அத்வைதிகளின் மனம் வெகுவாய் கலக்கமடைந்து இதற்கென்ன உபாயம்
செய்வதென்று அவர்கள் கும்பகோணத்திற்கு அருகாமையிலுள்ள முடி
கொண்டானில் நடந்த அத்வைத சபையில் யோசித்தனர். பிறகு
ஸ்ரீமான் சுந்தரராமய்யர்வாள் மூலமாய் பல பெரிய அத்வைதபண்டிதர்க
ளுக்கு தந்தி அனுப்பப்பட்டு அவர்களை உடனே வந்துசேரும்படி கேட்டுக்
கொள்ளப்பட்டது. அந்த தந்தியின்பேரில் கல்கத்தாவிலிருந்து பிரம்மஸ்ரீ
மகாமகோபாத்யாயம் அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளும், சிதம்பரத்திலி
ருந்து பிரம்மஸ்ரீ மகாமகோபாத்யாயம் தண்டபாணி தீக்ஷிதரும், மதராஸி
லிருந்து பிரம்மஸ்ரீகளான கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகள், ராமசந்திர
தீக்ஷிதர், பத்மநாப சாஸ்திரிகள் முதலியோரும் வந்து சேர்ந்தனர்.
தஞ்சைஜில்லாவிலுள்ள அத்வைதிகளான பெரிய மிராசுதார்களும், தன
வந்தர்களும் பெருங்கூட்டமாய் வந்தனர். ஆனால் மகாமகோபாத்யாயம்
மைசூர் பிரம்மஸ்ரீ விருபாக்ஷ சாஸ்திரி முதலிய சில பண்டிதர்கள் வரா
மல் சாக்குபோக்கு சொல்லிவிட்டார்களாம். அத்வைதம் அவைதிக
மென்று வாதிக்கும் ஸ்ரீஸ்வாமிகளுடன் எத்தனை மாதமானாலும் வாதாடி
அவர்கள் மன்னிப்பு கேட்டுக்கொள்ளும்படி செய்துவிடுகிறதென்று எண்
ணிக்கொண்டு பிரம்மாண்டமான கூட்டங்களும் கூட்டப்பட்டன. கல்
கத்தா சாஸ்திரியார் வாதம் துவக்கிய நாளில் அந்த லைப்ரெரி ஹாலில்
சுமார் 1500 ஜனங்கள் கூடிப்போய் ஜனங்களின் நெருக்கடி மிகவும்
அதிகமாய்ப் போய்விட்டது. ஆனால் எங்கும் நிச்சப்தம் நிலவியிருந்தது.
கல்கத்தா சாஸ்திரியார் கம்பீரமாய் தமது கக்ஷியை ஸம்ஸ்கிருதத்திலும்
தமிழிலும் சொல்லி நிறுத்தியதும் ஸ்ரீஸ்வாமிகள் யாதுபதில் சொல்லப்
போகிறாரோவென்று துவைதிகள் வெகு ஆவலாய் எதிர்பார்ப்பதும்,
ஸ்ரீஸ்வாமிகள் பதிற்சொல்லி அது தமிழில் நிரூபிக்கப்பட்டவுடன் துவை
திகளின் முகங்களில் பேரானந்தம் தாண்டவமாடுவதும், இதற்கு பதிற்
கக்ஷியை சாஸ்திரிகள் எப்படி சொல்லப்போகிறாரோவென்று உடனே
அத்வைதிகளின் முகம் கவலையால் வாட்டமடைவதும் இப்படி மாறிமாறி
இருதரத்தாரும் சிந்தையையும் ஆனந்தத்தையுமடைந்துகொண்டிருந்தது
ஓர் காக்ஷியாகவே இருந்தது. ஸ்ரீஸ்வாமிகள் அஞ்சாநெஞ்சம்படைத்தவ
ராய் மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பத்திலும் பிரதிவாதிகள் அசம்பா
விதமாய் நடந்துகொண்டகாலத்திலும் சற்றேனும் புத்தியைத் தளரவிடா



மல் கோபத்திற்கிரையாகாமல் புன்சிரிப்புடன் வாதாடிவந்தது எதிர்கக்ஷி
யாராலுமே மிகவும் கொண்டாடப்பட்டுவந்தது. பகவத்கீதையில் வேதத்
திற்கு சாதகமானது 2, 3 சுலோகங்கள்தானென்று கல்கத்தா சாஸ்திரி
யார் கேட்டதற்கு ஸ்ரீஸ்வாமிகள் ஸர்வாபிகீதா கீதாவில் எல்லா சுலோ
கங்களுமே பேதத்திற்கு சாதகமென்று கம்பீரமாய்ச்சொன்னது எல்லோ
ரையும் பிரமிக்கச்செய்தது. ஸ்ரீஸ்வாமிகள் ஸ்ரீசங்கரபாஷிய வசனங்
களையே அப்போதைக்கப்போது உதாஹரிப்பதும், தற்போது அத்வைதி
கள்செய்யும் வாதத்திற்கு பாதகமாயிருப்பதாய் அறிவிப்பதும் மிகுந்த ஆச்
சரியத்தையே விளைவித்தது. ஸ்ரீமத்வ சாஸ்திரங்களிலும் அவைகளை
வாதம் செய்வதிலும் நம்மவர்களில் மஹனீயர்களநேகர் பிரஸித்தியடைந்த
துண்டு. இவ்வாறு அத்வைத கிரந்தங்களை எல்லாம் சம்பூர்ணமாய் பரிசீ
லனைசெய்து அந்த வாக்யங்களை மனப்பாடம்செய்து தம் வாதத்திற்கு
அனுகூலமாய் அப்போதைக்கப்போது தங்குதடையின்றி காட்டிக்
கொண்டு பிரதிவாதிகளை நிக்ரஹம்செய்த நம்மவர்கள் இப்பால் ஒருவரும்
இருந்ததாய்த்தெரியவில்லை. ஸ்ரீவிஜயீந்திரர் ஸ்ரீவாதிராஜர் முதலிய மகா
ஞானிகளின் கோஷ்டியில்தான் இந்த ஸ்வாமிகளை சேர்த்துப்பேசவேண்
டும். கல்விமிகுந்த இந்நாளில் அத்வைதிகள் நிறைந்த இத்தேசத்தில்
அத்வைதம் அவைதிகமென்று உத்கோஷித்தும்பெரிய பத்திரிகை
களில் பிரசுரித்தும் வாதமாடத்தயாராக நிற்பது பண்டிதர்களாலும்
எண்ணவும் முடியாததாகும். ஸ்ரீவாயுபகவானின் மகாசக்தியே
ஸ்ரீஸ்வாமிகளிடம் புகுந்திருப்பதால் அத்தகைய மனோதைரியமும் புத்தி
நுட்பமும் பிரதிவாதிகளை மௌனமாக்கும் மகா சாமர்த்தியமும் உண்டா
யிருக்கிறது. அத்வைதிகள் இத்தனை ஆர்பாடங்களைச் செய்தார்களே
யன்றி க்ஷேத்திரக்ஞன் ஜீவன்தானென்றும் க்ஷேத்திரக்ஞம்சாபிமாம்
வித்தி என்னும் சுலோகம் அபேதத்தைத்தான் சாதிக்கிறதென்றும் நிரூ
பிக்கமுடியாமல் சபையிலிருந்து எழுந்துபோகும்படி நேரிட்டது.
ஸ்ரீஸ்வாமிகள் தாம் ஒருமாதகாலம் வாதத்திற்கு தயாராயிருப்பதாய் அறிக்
கையை வெளியிட்டதை அனுஸரித்து சபைக்கு அத்வைதிகள் வாதத்
திற்கு வராமல் நின்றபின்பும் சரியாய் 4-4-31 வரை இந்நகரிலேயே
இருந்து பிரதிதினமும் சபையில்வந்து உட்கார்ந்து யார் எந்த ப்ரச்னம்
செய்தாலும் அவைகளுக்கு சுலபமாய் மனதிற்பதியுமாறு பதில்கூறிவந்

தார். இந்நகரில் ராமமந்திரமென்னும் பெரிய கட்டடத்தைக்கட்டி அத்வைத பாடசாலையை நடத்திவருகிறவரும் பெரிய தனவந்தரும் புத்திமானுமாகிய ஸ்ரீமான் A. சுப்பிரமணிய அய்யர் ஸ்ரீஸ்வாமிகளை அத்வைத சம்பந்தமாய் அநேக பிரச்னைகளைச்செய்ய ஸ்ரீஸ்வாமிகள் அவருக்கு திருப்திகரமான பதில்களை அளிக்கவும் ஸ்ரீஸ்வாமிகளின் பெரும்பாண்டித்யத்தையும் அரியபெரிய குணங்களையும் மெச்சி அழகிய தனது பங்களாவை ஸ்ரீஸ்வாமிகள் வசிக்க விட்டிருந்ததுமன்றி ஓர் பிக்ஷையையும் நடத்திவைத்தார். இந்நகரில் துவைதமதத்தின் ஜயத்வஜத்தை நாட்டிய ஸ்ரீஸ்வாமிகளின் போட்டோ இம்மித்திரனின் பத்திராதிபரால் பிடிக்கச்செய்யப்பட்டு ஜயஸ்யாசகமான சுலோகங்களுடன் அப்படங்கள் இம்மித்திரன் பத்திரிகாலயத்தில் கிரயத்திற்கு கொடுக்கத்தயாராயின. (இதன் விலை அணா 12. தபாற்கூலி வேறு.) ஸ்ரீஸ்வாமிகள் வெளியூர் சஞ்சாரம் புறப்பட நாள் குறிக்கப்பட்டிருந்ததைக்கேட்டு இப்பத்திராதிபர் நம்மவர்களுக்கு ஸதுபதேசம்செய்யவேண்டுமென ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொள்ள ஸ்ரீஸ்வாமிகள் 3–4–31உயன்று வைதிகமதமும் ஆஸ்திகர்களின் கடமையும் என்பதைப்பற்றி கன்னடத்தில் வெகு சிலாக்யமாய் சுமார் $1\frac{1}{2}$ மணிநேரம் உபந்யாஸம்செய்தார். ஸ்ரீ-மவே. பாரதசிம்ஹம் காபே ராமசந்திராசாரியார் அதைத் தமிழில் எடுத்துச்சொன்னார். ஸ்ரீஸ்வாமிகளிடமிருந்து விடைபெற்றுக்கொள்ள இந்நகர் மாத்வர்களனைவரும் மாத்வர்களல்லாதாரும் கூடியிருந்த அச்சபையில் ஸ்ரீஸ்வாமிகள் இப்பத்திராதிபரிடம் பரமானுக்ரஹத்தைக்காட்டி "இவர் ஆத்ய வம்சத்தவர். எங்கள் மடத்தில் முதல் தீர்த்த கந்தராக்ஷதைப்பெறும் பாத்தியங்கொண்டவர். இவர் அதைப்பெற வற்புறுத்துவதில்லையாயினும் நாம் இச்சபையில் முதல் மரியாதையையே செய்கிறோம்" என்று ஸ்பஷ்டமாய் உரக்கச்சொல்லி இப்பத்திராதிபருக்கு பலமந்திராக்ஷதைகளை முதலில் அளித்தார். இது என் பாக்யமே என்று சொல்லி இந்த ஸந்தர்ப்பம் எப்போதும் ஞாபகத்திலிருப்பதற்காக இனி ஆத்யம் பாகவத ரங்கனாதாசாரியாரென்று பெயர் வைத்துக்கொள்வதாக ஸ்ரீஸ்வாமிகளிடம் இப்பத்திராதிபரும் விக்ஞாபித்துக்கொண்டார். எல்லோருக்கும் பலமந்திராக்ஷதைகளைக் கொடுத்தருளி ஜயகோஷத்தினிடையே ஸ்ரீஸ்வாமிகள் ஸ்ரீமான் A. சுப்பிரமணிய அய்யரின் பங்களாவுக்குச் சென்றார். மறுநாள் ஸ்ரீஸ்வாமிகள் கும்பகோணத்திலிருந்து நாச்சியார் கோவிலில் ஸ்ரீஸத்யாபிநவதீர்த்தரின் ஸன்னிதானத்திற்கு பிரயாணம் புறப்பட்டார். ஸ்ரீஸ்வாமிகள் இந்நகருக்குச்செய்த திக்விஜயமும் இந்த த்வைத மதத்திற்கு ஏற்படுத்திக்கொடுத்த வெற்றியும் எந்நாளும் மாத்வர்களால் மறவாமலிருக்கத்தக்கதே.



# ஸ்ரீமத் மத்வஸித்தாந்த உன்னாஹினி ஸபை உத்தேஜக ஸமாஜம்.

இப்பெயரைக்கொண்டு ஓர் சமாஜம் மதராஸில், திருப்பதி ஸ்ரீமான் கஞ்சி சுப்புராயர் அவர்களின் பிராசீன சபையை உயர்த்தும் எண்ணத்துடன் ஏற்பட்டிருப்பதைக் கேட்க நாம் மிகவும் சந்தோஷிக்கிறோம். ஸ்ரீமான் ஆரணி சுப்புராவ் அவர்கள் சென்ற வருஷத்திய சபா காலத்தில் உபந்யாஸம்செய்தபடிக்கு திருப்பதி சபை சென்ற வருடம்போல் செலவுசெய்துகொண்டேபோனால் இச்சபை வெகு ஸ்வல்ப வருடங்களிலேயே பணத்தட்டால் கலைந்துவிடநேரிடுமென்பதில் ஆக்ஷேபணையில்லை. சுமார் 50 வருடகாலமாய் செழித்தோங்கிவந்த இச்சபை ஆஸ்திக புத்தியும் ஆசாரிய பக்தியும் வளர்ந்துவரும் இந்நாளில் திரவியபலமின்றி குன்றிப்போய் உயிரைவிட நேர்ந்தால் அது இக்காலத்திய நம்மவர்களின் தௌர்பாக்யமென்றே சொல்லவேண்டியதாகும். ஆதலால் அந்த சபை நீடூழி வாழவேண்டுமானால் நம்மவர்கள் அபிப்பிராயபேதங்களை விட்டொழித்து இதுகாறும் ஸ்ரீமத்வ மதத்தை விசேஷமாய் பரவச்செய்ததும் ஆயிரக்கணக்கான மாத்வர்களை ஸ்ரீமத்வ கிரந்தங்களை படித்துணரும்படிசெய்து வந்ததுமான இந்த சபைக்கு தங்களாலியன்றளவு பணத்தையும் மெம்பர்களையும்கொடுத்து சகாயம் செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம். இச்சபைக்கு ஆதரவளித்து அதை பலப்படுத்தவும் இன்னமும் அதிகமான மெம்பர்களைச் சேர்க்கவும் சந்தாக்களையும் இனாம்களையும் வசூல்செய்யவும் அருகர்களான வித்யார்த்திகளையும் தர்மாதிகாரிகளையும் தைரியப்படுத்தி சபையின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளச்செய்யவும் இவைமுதலிய பல அவசியமான காரியங்களைச்செய்ய இந்த ஸமாஜம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாய் அதன் விதிகளிலிருந்து தெரியவருகிறது. இந்த வருடத்திய யுகாதிபண்டிகையன்று ஸ்தாபிக்கப்பட்டதாயும் வருடம் 1க்கு ஒரு ரூபாய் இதன் சந்தாவென்றும் இந்த சந்தாவைச்செலுத்தும் எந்த மாத்வரும் இந்த ஸமாஜத்தின் மெம்பராகலாமென்றும் வரையப்பட்டிருக்கிறது. இந்த ஸமாஜம்செய்ய உத்தேசித்திருக்கும் மஹத்காரியங்களை நோக்குங்கால் வருடத்திற்கு ஒரே ரூபாய் என்னும் ஸ்வல்ப தொகையைக்கொடுத்து இந்த ஸமாஜத்துக்கு ஒவ்வொரு மாத்வரும் மெம்பராகவேண்டியதவசியமே. இந்த ஸமாஜத்தின் விதிகள் தனியாய் அச்சிடப்பட்டிருக்கின்றன. மதராஸிலுள்ள அநேக பிரமுகர்களான மாத்வர்கள் இந்த ஸமாஜத்தின் காரிய நிர்வாகிகளாக இருக்கின்றனர். ஸ்ரீமான்களான ஆரணி சுப்புராவ் (ரிடையர்டு போலீஸ் சூபரின்டெண்டு) ப்ரஸிடெண்டாகவும், திவான்பகதூர் T. வெங்கோபராவ் (ரிடையர்டு போலீஸ் சூபரின்டெண்டு), ராவ்பகதூர்

A. ஹனுமந்த ராவ் (மதராஸ் கவர்ன்மெண்டு அஸிஸ்டெண்டு செகரிடரி) T. சாமாராவ் (ரிடையர்டு சப்ஜட்ஜ்) இவர்கள் வைஸ்பிரஸிடெண்டுகளாகவும், B. குருராஜராவ் (ரிடையர்டு சப்ஜட்ஜ்), ராவ்பகதூர் S.N.V. ராஜாசாரியார் (ரிடையர்டு மதராஸ் கலெக்டர்) இவர்கள் காரியதரிசிகளாகவும், ஷை S. N. V. ராஜாசாரியாரவர்களே டிரஷரராகவும், T. வாஸுதேவராவ் (ரிடையர்டு டிப்டிகலெக்டர்) ஆடிட்டராகவும் இருக்கின்றனர். நல்ல நோக்கத்துடன் கிளம்பிய மிக்க கௌரவம் வாய்ந்தவர்களைக் கொண்ட இந்த ஸமாஜம் சரியாய் காலதேசவர்த்தமானத்தை ஒட்டி நடவடிக்கைகளை நடத்தி தன் எண்ணத்தை தீவிரமாய் முடித்துக்கொள்ளுமென்றே நம்புகிறோம்.

---

## * மதிப்புரை.

### ஸ்ரீமத்வஸித்தாந்த ஸாரம்.

இதில் வினாவிடை ரூபமாய் ஸுலபமான தமிழில் ஸ்ரீமத்வஸித்தாந்த சம்பந்தமான பலவிஷயங்கள் சங்கிரஹமாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்த விஷயங்களுக்கு பிரமாணமாக பிரம்மஸூத்திரங்கள் உதாஹரணம் செய்யப்பட்டிருப்பது மெச்சத் தகுந்ததே யாகும். இத்துடன் ஸ்ரீ கல்யாணி தேவி இயற்றிய "விஷ்ணுஸ்ஸர்வோத்தமோத" என்னும் தாரதம்மிய ஸ்தோத்திரம் தேவநாகரத்தில் அச்சிடப்பட்டு அதன் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தகுந்தது. இது ராமேச்வரத்திலிருக்கும் ஸ்ரீ-ம-வே. உமர்ஜி கிருஷ்ணாசாரியாரால் இயற்றப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 6. இந்த புஸ்தகம் இதன் ஆசிரியரிடமே கிடைக்கும்.

---

* மதிப்புரைக்காக வந்த புஸ்தகங்கள் கிரயத்திற்கு இப்பத்திரிகாலயத்தில் கிடைக்காதென்று நாம் முன்னமேயே ஸ்பஷ்டமாய் அறிவித்தும் சந்தாதாரர்கள் அவைகளுக்காக தபால் பில்லைகளை அனுப்பிவிட்டு புத்தகங்கள் அனுப்பப்படவில்லை என்று அடிக்கடி எழுதிவருவது வருந்தத்தக்கதாயிருக்கிறது. இனி அவ்வாறு செய்யாதிருக்கக் கோருகிறோம்.

[ப-ர்.]



### பக்தபாதன் அல்லது ஸ்ரீ பாதுகா பட்டாபிஷேகம்.

எத்தகைய கல்நெஞ்சனையும் கரைத்து பக்தி பாவசமாக்கும் இந்த ஸ்ரீ ராமசரிதை நாடக ரூபமாய் மன்னார்குடி டிஸ்டிரிக்டு முன்சீப் ஸ்ரீமான் S. K. பார்த்தஸாரதி அய்யங்கார் B.A.,B.L., அவர்களால் எழுதப்பட்டு அவராலேயே வெளிப்படுத்தப்பட்டு எமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நாடகாஸமில்லாது கேவலம் ஜீவிய சரிதமாயுள்ள ஸ்ரீராமானுஜர் ஸ்ரீசங்கரர்போன்ற நாடகங்களை சிலாக்கியமாய் எழுதிப்பிரஸித்தியடைந்திருக்கும் இந்நூலாசிரியர் மிகவும் இனிதான கதாபாகம் பொருந்திய இந்நாடகத்தை ஸர்வரஸ பூர்ணமாய் எழுதியிருப்பாரென்பது நாம் சொல்லாமலேயே விளங்கும். தசரதனின் புலம்பலும், பரதனின் பக்திவாதமும் புகழக்கூடியதாய் இருக்கிறது. இடையிடையே கம்பராமாயணப் பாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்திறகு சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் கனம் திவான்பகதூர் ஸ்ரீமான் K. சுந்தரம்செட்டியார், B.A.,B.L., அவர்கள் முன்னுரையையும் நாடகசிம்ஹம் ஸ்ரீமான் ராவ்பகதூர் P. சம்பந்தமுதலியார் B.A.,B.L., அவர்களும் ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீமான் R. ராகவய்யங்கார் அவர்களும் மதிப்புரைகளையும் அளித்திருக்கின்றனர். அந்தந்த சந்தர்ப்பத்திற்கேற்ற பாட்டுகளும், அவைகளின் ஸ்வரங்களும் தயாரிக்கப்பட்டு சேர்க்கப்பட்டிருக்கின்றன. 104 பக்கங்களைக்கொண்ட இப்புத்தகத்தின் கிரயம் அணா 12. நூலாசிரியரிடமிது கிடைக்கும்.

### தஞ்சாவூர் பஞ்சாங்கம்.

நாளது பிரஜாபதி ஸம்வத்ஸரத்திய தஞ்சாவூர் சித்தாந்த பஞ்சாங்கமொன்று கிடைக்கப்பெற்றோம். இஃது தஞ்சை பார்ஸ்ட்ல் ஸ்கூல் ஸம்ஸ்கிருத உபாத்தியாயர் ஸ்ரீமான் D. S. பாலசுப்பிரமணிய சாஸ்திரியாரால் கணிதம்செய்யப்பட்டு பிரசுரம்செய்யப்பட்டிருக்கிறது. இதர தஞ்சாவூர் பஞ்சாங்கங்களின்படியே நம்மவர்களின் புண்ய தினங்கள் முதலியவைகளும், ஏகாதசி முதலிய விரதாதி அனுஷ்டான விபரங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன

இவராலேயே தமிழிலும் ஸித்தாந்த பஞ்சாங்கம் தயார்செய்யப் பட்டிருப்பது குறிப்பிடத்தகுந்தது. தேவநாகா பஞ்சாங்கம் விலை 0—4—6. தமிழ் பஞ்சாங்கம் விலை 0—3—6. ஷைகாப்பி கள் இதன் ஆசிரியரிடம் கிரயத்திற்கு கிடைக்கும்.

---

## கடிதங்கள்.

(பம்பாய்) மாதுங்காவிலிருந்து இதுகாறும் பிரசுரிக்கப்பட்டு வந்துள்ள "மத்வமுனிதாஸா" எனும் ஆங்கில மாதாந்திரப்பத்திரிகையானது நாளது மே-மீ முதலாக திருப்பதி வியாஸா பிரஸிலிருந்தே பிரசுரிக்கப்படுமாறு எத்தனம் செய்துள்ளவகையில் சில சட்டநிபந்தனைகளை அனுசரிக்க தாமதம் ஏற்பட்டதினால் வழக்கம்போல் முதல் தேதியன்றே வெளிப்படுத்த முடியாது. 15-நாள்களுக்குள்ளாவது விபாகிக்கப்படும் என்ற விஷயத்தை அறியும் நண்பர்கள் அங்ஙனம் நேரிட்ட குறையை பொருட்டாக எண்ணாது அடியேனை மன்னிக்குமாறு வேண்டுகின்றனன்.

மத்வமுனிதாஸா ஆபீஸ்,<br>(பம்பாய்) மாதுங்கா,<br>103 பிரோஜ்பில்டிங்க்ஸ்,<br>23—4—1931.

டி. வி. கிருஷ்ணசாமி ருவ்,<br>பத்திராதிபர்.



## செய்தித்திரட்டு.

---

துவைதாத்வைத விவாத புஸ்தகம் இன்னமும் அதிகமான பக்கங்களைக் கொள்வதால் புஸ்தகம் பூர்த்தியாகவில்லை. போஸ்டேஜ் லேபிள்களை அனுப்பியவர்களுக்கு சுமார் 10 நாளில் அது தயாராகி அனுப்பப் படும்.

ஆனேகுந்தியில் ஸ்ரீ வியாஸராஜஸ்வாமிகளின் பிருந்தாவனத்தின் சன்னதியில் 7—3—31வயன்று ஸ்ரீவியாஸராஜஸ்வாமிகளின் புண்யதின மகோற்சவம் ஷைமடம் ஸர்வாதிகாரி ஸ்ரீ-ம-வே. சுந்தரராஜாசாரியாரவர் களாலும் அதற்கு முதல்நாள் 6—3—31வயன்று ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடத்து ஸ்ரீஸுரேந்திரஸ்வாமிகளின் புண்யதினம் ஸ்ரீ-ம-வே. கொப்பள பீமாசாரியாராலும் வெகு சிறப்பாய் நடத்தப்பட்டதென்றும் சுமார் 1000 மாத்வர்கள் கூடியிருந்தனரென்றும் பல சங்கீத கச்சேரிகள் ஹரிகதாகால க்ஷேபங்கள் முதலியவை நடத்தப்பட்டனவென்றும் ஸ்ரீமான் சிந்தாமணி கே. சாமாசாரியார் ஆனேகுந்தியிலிருந்து மந்திராக்ஷதை பிரஸாதங்களுடன் அறிவிக்கிறார்.

விருத்தாசலத்தில் ஸ்ரீமான் வக்கீல் S. கிருஷ்ணராவின் ஆதரவில் மைசூர் ஸ்ரீமான் நரஹரிதாஸரவர்களால் ஸ்ரீராமநவமி மகோற்சவம் வெகுவாய் கொண்டாடப்பட்டதாய் ஸ்ரீமான் முலுபாகலு ஸ்ரீனிவாஸராவ் அறிவிக்கிறார்.

மதராஸ் திருவடீசுவரன் பேட்டையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீஆஞ்சனேய பக்தஜனநிதியின் வருஷாந்தரக்கொண்டாட்டம் 12-1-31 தேதியன்று கொண்டாடப்பட்டதாயும், தற்போது அந்தநிதிக்கு 78 மெம் பர்களும் ஷேர் மூலதனம் ரூ. 523ம் இருப்பதாகவும் முந்தின வருஷத் தில் ரூ. 15—3—5 லாபம் இருந்ததற்கு இந்த வருஷத்தில் ரூ. 61-0-4 வருமானம் வந்ததாகவும் ஸ்ரீஆஞ்சனேயர்கோவிலின் சிலவு வகையறாவுக் காக ரூ. 40—2—5 ஒதுக்கிவைக்கப்பட்டதென்றும் மீதியுள்ளதை ரிசர்வ் பண்டுக்கும் டிவிடெண்டுக்குமாக கொடுக்கப்பட்டதென்றும் கட்டிடத்திற் காகவென்று ஓர் பண்டு வசூலிக்கப்பட்டுவருகிறதென்றும் மற்றும் சில விபரங்களைக்கண்டு வருஷாந்தர ரிபோர்ட்டு வாசிக்கப்பட்டதாயும். முடி வில் ஸ்ரீமான் ராவ்பகதூர் D. ராகவேந்திரராவால் உபன்யாஸம்செய்யப் பட்டு அன்றைய கொண்டாட்டம் முடிவுற்றதென்றும் ஸ்ரீமான் T. R. சுப்புராவ் அறிவிக்கிறார்.

தர்மபுரி ஸ்ரீஆஞ்சநேய நிதியின் இரண்டாவது வருடத்திய ரிபோர்ட் வரப்பெற்றோம். இது மாத்வர்களைக்கொண்டே நடத்தப்பட்டுவருகிறது மாத்வர்கள்தான் இதற்கு ஷேர்ஹோல்டர்களாகலாம். ஆதலால் இது மாத் வர்களின் தனிமையான ஓர் பாங்கி ஆகும். இதற்கு ஷேர் 1க்கு ரூபா 10 வீதம் 2000 ஷேர்கள் வெளியே கொடுக்கப்படுமென்றும் தற்போது ரூபா 2615 ஷேர்தொகை வசூலிக்கப்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது. ரிடை

யர்டு டிப்டிதால்சில்தார் ஸ்ரீமான் P. V. கிருஷ்ணஸாமி ராவ் பிரசிடெண்டாகவும், ஸ்ரீமான் P. H. சுப்புராவ் காரியதரிசியாகவும், மற்றும் அவ்வூர் பல மாத்வ பிரமுகர்கள் டைரெக்டர்களாகவுமிருக்கின்றனர். தற்போது 95 மெம்பர்களிருப்பதாகவும் ரூ. 1003—15—1 இவ்வருஷத்தில் லாபம் வந்ததாகவும் அதில் ரூ. 254-12-0 ஷேர்ஹோல்டர்களுக்கு 100க்கு 12-வீதம் டிவிடெண்டு கொடுக்கப்பட்டதென்றும் அவ்வூர் மாத்வசபையின் பண்டுக்காக ரூ. 189-3-2 கொடுக்கப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடாதிபதி ராமேசுவர யாத்திரை முடித்துக்கொண்டு தற்போது பட்டுக்கோட்டை பக்கத்தில் சஞ்சரிக்கிறார். ஸ்ரீஉத்தராதி மடாதிபதி ராமேசுவரத்திற்கு யாத்திரை செல்ல புதுக்கோட்டை பக்கத்தில் சென்றிருக்கிறார். ஸ்ரீவியாஸராஜ மடாதிபதி மைசூர் மாகாணத்து சஞ்சாரத்தை முடித்துக்கொண்டு இப்பக்கத்துக்கு வரத்தயாராகி வருகிறார். இத்தென்னாட்டு மாத்வர்களின் அதிர்ஷ்டம் பிரபலமே.

உத்திராதிமடமென்று பிரபலமான ஓர் மடத்திற்கு பெயர் ஏற்பட்டதால் ஸ்ரீ ரா க வே ந் தி ர ஸ் வா மி மடம் ஒரு சிலரால் தக்ஷிணாதி மடமென்று சிறிது காலத்திற்கு முன்பு அழைக்கப்பெற்றதாம். தற்பொழுது ஸ்ரீவியாஸராஜமடத்தை பூர்வாதி மடமென்று ஒரு சிலர் அழைக்கஆரம்பித்துவிட்டனர். மாத்வர்களில் இம்மூன்று மடங்கள் தான் முக்யமானவைகளாதலால் பஸ்சிமாதி மடமென்று இனி எதைச்சொல்லுகிறதென்றும் பஸ்சிமதிக்கு தன்னை மாத்வர்களால் ஆதியாகக்கொள்ளாதிருக்கும்படி என்ன பாபம் செய்ததென்றும் ஓர் நிரூபர் வினவுகிறார்.

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 9—5—31 | சனிவாரம் | சிரவண உபவாஸம், விஷ்ணுபஞ்சகவிரத உபவாஸம். |
| 13—5—31 | புதவாரம் | ஏகாதசி. |
| 17—5—31 | பானுவாரம் | அமாவாசை, விஷ்ணுபஞ்சக உபவாஸம். |
| 28—5—31 | குருவாரம் | ஏகாதசி. |
| 30—5—31 | சனிவாரம் | ஸ்ரீபாதராஜரின் புண்யதினம். |
| 31—5—31 | பானுவாரம் | பௌர்ணமி, வடஸாவித்திரி பூஜை, விஷ்ணு பஞ்சக உபவாஸம் |

மாத்தர்களுக்கு மட்டில் கிரயத்திற்கு கொடுக்கப்படும்.

ஸ்ரீ உத்தராதிமடம் ஸம்ஸ்தானாதிபதியாகிய
ஸ்ரீஸத்யதியான தீர்த்தஸ்வாமிகள் அருளிச்செய்த

### ஸ்ரீ கீதாதத்வம்.

கும்பகோணம் மாத்வமித்திரன் பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் (ஆத்யம்) பாகவத ரங்கநாதாசாரியாரால் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டது. பிரஸ்தானத்ரயங்களிலொன்றாகிய ஸ்ரீபகவத்கீதையில் த்வைதமதம்தான் சொல்லப்படுகிறதென்பது நன்கு காட்டப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத்வமதத்தின் பிரமேயங்கள் பலவாறு வகுக்கப்பட்டு அவைகளில் ஒவ்வொன்றுக்கும் ஸ்ரீபகவத்கீதையிலுள்ள ஆதாரங்கள் வெகு சிலாக்யமாய் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. தேவநாகரத்திலும் தமிழிலும் மூலசுலோகங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உயர்ந்தகாகிதத்தில் அச்சடித்த சுமார் 400 பக்கங்கள் கொண்ட இதன் முதற்பாகம் தற்பொழுது ஆர்டர் செய்கிறவர்கட்கு மட்டில் ரூ. 1-8-0. தபாற்கூலி முதற்சஞ்சிகைக்கு மட்டில் வேறு. சுமார் 80 பக்கங்களைக்கொண்ட முதல் சஞ்சிகை தற்போது ஆர்டர் செய்கிறவர்களுக்கு 2 வாரத்தில் வி. பி. யில் அனுப்பப்படும். பிறகு பிரதி மாதமும் சுமார் 64 பக்கங்களுக்கு குறையாத ஒவ்வொரு சஞ்சிகையும் இனாமாய் புக்போஸ்டில் அனுப்பப்படும். சரியான விலாஸத்தை தெளிவாய் எழுதி ஆர்டர்செய்யவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,
ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

### மாத்வர்களுக்கு உபயோகமான ஓர் அரிய நூல்.

அத்வைதம் அவைதிகமென்று ஸ்ரீ உத்தராதிமடம் ஸமஸ்தானாதிபதி ஸ்ரீமத் ஸத்யதியான தீர்த்த ஸ்வாமிகள் சொல்லிவருவதை நிரூபித்துக்காட்ட அத்வைதிகளால் பகிரங்கமாய் வாதத்திற்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அழைக்கப்பட்டு கும்பகோணத்தில் 4-3-31 முதல் சுமார் 1 மாத காலம் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கும் அத்வைத பண்டிதர்களுக்கும் நடந்த த்வைதாத்வைத விசாரத்தின் விபரமடங்கிய புஸ்தகம் சுமார் 80 பக்கங்களைக்கொண்டது. பல பிரமேயங்களை அறிவிக்கும் இவ்வரிய விசாரம் கும்பகோணம் மாத்வமித்திரன் பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் (ஆத்யம்) பாகவத ரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டு பிரசுரமாகி வருகிறது. 10 தினங்களில் வெளிவரும். தபால் செலவுக்காக ஒரு அணா போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்பினால் மாத்வர்கள் இப்புஸ்தகத்தை இனாமாக பெறலாம். பலநபர்களுக்காகவென்று ஒரே நபருக்கு பல பிரதிகள் அனுப்பப்படமாட்டா.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

# மகத்தான விற்பனை விளம்பரம்.

## மாத்வமித்திரன்.

**முதல் வாலியம்:**—இதில் ஜகத்சிருஷ்டியின் காலம் காரணம் வகைகள் முதலியவை பகவானுடைய வ்யூஹாவதாரங்கள் அவதாரங்கள் பகவத் ஆவேசம் பெற்றவர்களின் ஜாபிதா, தேவர்கள் தேவஸ்திரீகள் இவர்களின் பிரதிபிம்பபாவம், குணங்களின் சங்கியை, தாரதம்மிய விவரம், பஞ்சபேதம், பக்தியின்பெருமை, பக்தர்களின் மகிமை உபாஸனை க்ரமம், மோக்ஷத்தின் பிரகாரம், சற்குருவின் லக்ஷணம், பீமசேனருக்கு அதிகபலமிருந்ததின் காரணம், வாயுபகவானின் மேன்மை, பலித்தா சூக்தத்தின் அர்த்தம், மத்வமதத்தின் சிறப்பு, வேதத்தின் அநாதி அபௌருஷேயம், வர்ண நித்யத்வ வாதம், ஸ்ரீவேதவியாஸரின் வரலாறு, ஸ்ரீவாயு ஸ்துதியின் சரியான மொழிபெயர்ப்பு, ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் அற்புதச்செயல்கள், ஸ்ரீமத்வாசாரியார், ஸ்ரீஜயதீர்த்தர், ஸ்ரீபுரந்தரதாஸர் இவர்களின் ஜீவிய சரித்திரம், ஸ்ரீகிருஷ்ணரின் கைலாஸ யாத்திரை, சந்திரஹாஸ சரித்திரம் முதலிய ரஸமான கதைகள், ஸந்தியாவந்தன மந்திரங்களின் அர்த்தம். பிஷ்டபசுவிசாரம், முதலிய அரியபெரிய விஷயங்களடங்கியது. சுமார் 120 பக்கங்களைக்கொண்டது. சொற்ப காப்பிகள்தான் பாக்கி. இதன் விலை ரூ. 4—0—0.

**இரண்டாவது வாலியம்:**—இதில் பிரம்மாண்டத்தின் உற்பத்தி லயத்தின் பிரகாரம், வாராஹாதி அவதாரங்களின் சரிதை, ராவணாதிகளின் உற்பத்தி, யுகங்களின் பரிமாணம், தசரதனின் பூர்வ விருத்தாந்தம், தேவர்களின் அம்சங்கள்பெற்ற வானரங்களின்விபரம், ஹரிஹரர்களின் யுத்தம், அதில் ஸ்ரீஹரியின் வெற்றி, ராமரும் பரசுராமரும் ஐக்யமானது, கூனியின் வரலாறு, குரங்காசுர வதம், மகாலட்சுமியின் லீலை, சீதை கைலாஸம்சென்ற விருத்தாந்தம், ஹரி வாயுக்களின் நட்பு, வாலியின் பக்தியும் மரணமும், ஹனுமாரின் பராக்கிரமம், வேதப்பிராமாண்யவாதம், வேதாபௌருஷேய வாதம் வேதவிஷயமான பல அரிய நிரூபணங்கள், சார்வாகமத கண்டனம், பரமாணுவாதம், போஜன பதார்த்தங்களிலும் அன்னமயாதி கோசாதிகளிலுமிருக்கும் பகவத் ரூபங்களின் சங்கியையும் விபரமும், ஸாலக்கிராமத்தின் மகாத்மியம், தத்துவமஸி வாக்ய விமரிசை, ஸ்ரீராகவேந்திரர், ஸ்ரீகோபாலதாஸர் சரித்திரம் முதலிய எண்ணிறந்த விஷயங்கள் நிறைந்துள்ளது சுமார் 160 பக்கங்களைக்கொண்டது. இதன் விலை இனி ரூ 4—0—0.

இவ்வருடத்திய சந்தாதாரர்களுக்கு மட்டில்

| | | |
|---|---|---|
| 1 & 2 வாலியம் சேர்ந்து | ... ... | ரூ. 5—0—0 தான் |
| 1 வாலியம் மட்டில் ... | ... .. | ரூ. 3—0—0 |
| 2 ... | ... ... | ரூ. 3—0—0 |

மானேஜர் மாத்வமித்திரன் ஆபீஸ்,
ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.